MIN ALAI

# மின் அலை

August 2026 Volume : 14 Issue 08 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-



மின்வாரிய வரலாற்றில் முதன்முறையாக 817 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கும், 35 ஆண்டுகளுக்கு மேல் மின்வாரியத்தில் பணியாற்றிய தகுதி உள்ள இளநிலை பொறியாளர்களுக்கு பணிநிறைவு பெறும் நாளன்று எட்டாக்கனியாக இருந்த உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை வழங்கி ஓய்வு பெற செய்திட்ட

**மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.C.T.R.நிர்மல்குமார் அவர்களுக்கு**

நடைபெற்ற பாராட்டு விழாவில் பொறியாளர் சங்கம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.


## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
|---|---|---|
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

# 80வது சுதந்திர தின விழாவில் சிறப்பான மின்வாரிய பணிகளுக்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்ட நமது உறுப்பினர்களை பொறியாளர் சங்கம் மனதார பாராட்டுகிறது



Er. R. Vanitha, JE, Er. M. Sekar, AEE, Er. K. Kumar, JE



Er. T. Balasubramani, JE



Er. D. Sabarinathan, JE



Er. N. Janani, AE



Er. J. Malarvannan, AEE



Er. P. Mohan, AE



Er. G. Venkatesan, AE



Er. A. Gopal, AE

ஆசிரியர்
பொர்.உ..ராஜேந்திரன்
9092687454

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

| Page | Contents |
|---|---|
| 7 | Our Representations |
| 9 | உதவி செயற்பொறியாளர் (மின்) பதவி உயர்வு |
| 11 | ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 5வது மாநில பொதுக்குழு கூட்டம் |
| 13 | சுதந்திர தின நிகழ்ச்சியில் பாராட்டு பெற்ற பொறியாளர்கள் |
| 14 | அறிவோம் பொறியாளர் தின வரலாற்றை... |
| 16 | பத்திரிக்கை செய்தி |
| 22 | அகில இந்திய அளவில் தங்க பதக்கம் வென்ற தமிழ்நாடு மின்வாரிய அணி |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 14 ஆகஸ்ட் -2026 இதழ் 08

## வரவு எட்டணா..! செலவு பத்தணா..???

நம் மின்வாரியம் ஒவ்வொரு நாளும்–– நித்தம் நித்தம் –– வளர்ந்து கொண்டிருக்கிற புதுமையான துறையாகும். அதைப்போல புதிய தொழில்நுட்பங்களை சந்தித்துக் கொண்டு ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் சென்று சேவை செய்யும் ஒரே துறை “மின்வாரியம்” ஆகும்.

இதன் காரணமாக, கால மாற்றங்களை; தொழில்நுட்ப வளர்ச்சியினை; மாறிக்கொண்டிருக்கும் சமூகத் தேவைகளை; புரிந்து, ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயச் சூழல் கொண்டது மின்வாரியமாகும்.

2000க்கு முன்புவரை EM மீட்டர்; 2000–ல் HQ; 2010–ல் Static; 2015-Static with MD, Static DLMS தற்போது TOD வசதி கூட்டப்பட்டு கடந்த 25 ஆண்டுகளில் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப தமிழக மின்வாரியதில் புதிய மீட்டர்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இந்த மீட்டர்கள் அனைத்தும் 5 முதல் 10 ஆண்டுகள் காப்புறுதி உள்ளவையாக இருந்தாலும், மிகுந்த பொருட்செலவுக்கிடையே அவை புதிய மீட்டர்களாக மாற்றப்பட்டன.

இதற்கிடையே மத்திய அரசின் RDSS என்ற திட்டத்தின் நெருக்கடிகளால் வீடுகளில் தற்போது பயன்படுத்திக் கொண்டிருக்கும் டிஜிட்டல் மீட்டர்களை மாற்றிவிட்டு ஸ்மார்ட் மீட்டர்களை (smart meter) பொருத்தவேண்டிய சூழலுக்கு மின்வாரியம் தள்ளப்பட்டு வருகிறது.

சென்னை தி. நகரில் SMART CITY திட்டத்தில் சுமார் 1.29 லட்சம் மின் இணைப்புகளில் 120 கோடி திட்ட மதிப்பீட்டில் smart meter நிறுவப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுக்கு சுமார் ₹20.14 கோடி வணிக இழப்பை குறைக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் திட்டத்தினால் அடைந்த வணிக லாபம் ஏதும் பொதுவெளியில் அங்கீகரிக்கப்பட்ட தர அமைப்புகளால் இன்று வரை வெளியிடப்படாத நிலையில், புதிதாக 50 லட்சம் மீட்டர்கள் நிறுவ தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஆனால் அண்டை மாநிலங்களில் CAPEX முறையில் தேவைப்படுகின்ற அனைத்து smart மீட்டர்களையும் மின்வாரியமே தன் சொந்த செலவில் வாங்கி, மீட்டர் பொருத்துவது, meter ownership, maintenance responsibility software/ communication உட்பட அனைத்து கட்டுமான வேலைகளையும் மின்வாரிய ஊழியர்களே செய்வார்கள். ஆனால் வாரியம் திட்டமிட்டுள்ள TOTEX முறையில் தனியார் ஒப்பந்தக்காரர்தான் மீட்டர்களை வாங்கி பொருத்தி பராமரிப்புப் பணி உட்பட அனைத்து வேலைகளும் ஒப்பந்த அடிப்படையில் செய்வார்கள். தொடக்கத்தில் ஒப்பந்த அடிப்படையில் பல கோடி ரூபாய்களையும், பிறகு நீண்ட காலத்திற்கு ஒப்பந்தத்தின்படி மாதாமாதம் பல கோடி ரூபாய்களையும் மின்வாரியம் வழங்க வேண்டும்.

TOTEX முறையால் மின்வாரிய பொதுத்துறையில் பணியிடங்கள் பாதிக்கப்படும். தொழில்நுட்பக் குறைபாட்டால் நுகர்வோருக்கு ஏற்படும் சேவை குறைபாட்டை, சரி செய்வதில் சிக்கல்கள் எழும். எல்லாவற்றிற்கும் மேலாக Remote metering and reading, accurate billing, better collection, automatic energy accounting, theft/loss detection, load forecasting, consumer consumption monitoring என பல நன்மைகள், ஸ்மார்ட் மீட்டரில் காணப்பட்டாலும் மின்வாரியம் திட்டமிட்டுள்ள TOTEX முறையால் அனைத்து நன்மைகளையும் மீறி Safety, Security, Total huge Expenditure in long run, Responsibility, Accountability நுகர்வோரின் தரவுகள் மற்றும் ரகசிய காப்பு (Data & Privacy ) என்ற நடைமுறை சிக்கல்களை ஆபத்துகளை மின்வாரியமும் தமிழக அரசும் சந்திக்க நேரிடும்.

APDRP, R-APDRP, LT billing, GIS mapping project மற்றும் சமீபத்திய மின்வாரிய அலுவலகங்களின் செல்போன் இணைப்புகள் (ஏர்டெல்– ஜியோ porting) வரை, தனியார் நிறுவனங்கள் தங்களின் வணிக லாபங்களை மட்டுமே பிரதானமாக இருந்து செயல்பட்டதும்,தமிழக மின் வாரியத்தின் அன்றாட செயல்பாடுகளை முடகியதோடல்லாமல், மின் நுகர்வோர்களையும், மின் வாரியத்தையும் நிதியிழப்புக்கு உள்ளாக்கியதுதான் வரலாறு. வாரியம் கொடுக்க வேண்டிய பில் தொகையை கொடுக்க சற்று தாமதமானதால் அந்த தனியார் நிறுவனமானது, தமிழ்நாடு முழுவதுக்குமான மின்வாரிய பண வசூல் கட்டமைப்பையே நிறுத்தியதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள 50 லட்சம் மீட்டர்கள் பொறுத்த சுமார் ரூ.5000/– கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தினால் மின்வாரியத்திற்கு – உண்மையான சேமிப்பு எவ்வளவு கிடைக்கும் என நிரூபிக்கப்படவில்லை. எவ்வளவு billing improvement? எவ்வளவு theft detection? எவ்வளவு AT&C loss reduction ? எவ்வளவு man power saving? எத்தனை ஆண்டுகளில் முதலீடு திரும்பும்? Measurable savings எவ்வளவு? என எதுவுமே தெரியவில்லை.

ஏற்கனவே Billing Efficiency 90.32% ( தேசிய சராசரி: 87.59%) மற்றும் collection efficiency 98.58% (தேசிய சராசரி: 97%) ஆகியன தேசிய சராசரியை விட திருப்திகரமாக உள்ள தமிழகத்திற்கு, இது கூடுதல் நிதி நெருக்கடியையே அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் 2000ம் ஆண்டுவாக்கில் பொறுத்தப்பட்ட 34 லட்சம் EM/HQ மீட்டர்களை டிஜிடல் மீட்டராக மாற்றினாலே, நாம் ஓரளவு வணிக இழப்பை குறைக்க வாய்ப்புள்ள நிலையில், இத்திட்டம் தற்போதய ஆழ்ந்த நிதி சிக்கலில் உள்ள தமிழக மின் வாரியத்திற்கு தேவையற்றது. நாம் தேர்ந்தெடுத்து அணியும் ஆடைகளே நம் ரத்தத்தை குடித்து விடக்கூடாது. அவசரத்தில் புல்லாங்குழலை பொன்னில் செய்து விடக்கூடாது.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.–

(திருக்குறள் –உரை)

(ஒரு செயலைத் தொடங்குமுன்) அதனால் அழிவதையும் அழிந்த பின் ஆவதையும், பின்பு உண்டாகும் ஊதியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

மிகப்பெரிய வேலைவாய்பின்மையில் தமிழக இளைஞர்கள் சிக்குண்டிருக்கும் இவ்வேளையில், வேலை வாய்ப்புகளை பெருக்கி, மாற்றம் எங்கிருந்து வரவேண்டும் என்பதை தமிழக அரசும் மின்வாரிய தலைமையும் உணர்ந்து மாற்றங்களை புகுத்தி கடைநிலைப் பணியிடங்களை நிரப்பி குறைந்த பொருட்செலவில் மின் பயனீட்டாளர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே நம்முடைய மிகப்பெரிய எதிர்பார்ப்பாக உள்ளது.

## பொதுச்செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே! வணக்கம்,

கடந்த 23.07.2026 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் மற்றும் இயந்திரவியல் பதவி உயர்வுகள் மற்றும் உள்முகத் தேர்வு பதவி உயர்வுகளை தொடர்வது குறித்தும் நாம் அளித்த முறையீடுகளைத் தொடர்ந்து, 30.07.2026 அன்று தலைமையகத்திற்கு வருகை புரிந்த மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, 31.07.2026 அன்று நமது இளநிலை பொறியாளர்கள் ஐந்து நபர்கள் 20 ஆண்டு காலத்திற்கும் மேலாக இளநிலை பொறியாளர் முதல் நிலையாக பணிபுரிந்து, உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வினை எதிர்பார்த்து காத்திருந்து, பதவி உயர்வு பெறாமலேயே பணி நிறைவு பெற இருந்த இக்கட்டான நிலையை எடுத்துரைத்து, உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினோம்.

மின்துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக பதவி உயர்வுகளை வழங்கிட உத்தரவிட்டதாக தெரிவித்தார்கள். தொடர்ந்து வாரியத் தலைவர், இயக்குனர் / விநியோகம் மற்றும் தலைமை பொறியாளர் பணியமைப்பு ஆகியோரிடமும் இது குறித்து தெரிவிக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது.

அமைச்சர் அவர்கள் உறுதியளித்தபடி கடந்த 30.07.2026 அன்று 905 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வு பட்டியல் அனுமதி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 31.07.2026 அன்று பணி நிறைவு பெற இருந்த இளநிலை பொறியாளர்கள் / முதல் நிலை ஐந்து நபர்களுக்கும் அன்றைய தினம் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு உத்தரவு பணியமைப்பு நிர்வாகத்தால் வழங்கப்பட்டது.

மேலும் அதற்கு முன்பாக உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவியில் பெறப்பட்ட விருப்ப ஊர் மாறுதல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியான பொறியாளர்களுக்கு ஊர் மாறுதல் உத்தரவுகளும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து 700 பொறியாளர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. 31.05.2026 அன்று தற்காலிக பதவி உயர்வு பட்டியலில் 117 பொறியாளர்கள், 31.07.2026 அன்று 700 பொறியாளர்கள் என மொத்தம் 817 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுகள் பெற்று தரப்பட்டுள்ளது.

பொறியாளர் சங்கத்தின் சமீபத்திய பதவி உயர்வு நடவடிக்கைகளில், இந்த உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு சங்கத்தின் சிறப்பான செயல்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

இந்தப் பதவி உயர்வு நடவடிக்கைகள் மற்றும் ஊர் மாறுதல் உத்தரவுகளை உரிய நேரத்தில் வழங்கிட இரவு பகல் பாராது பணியாற்றிய, பணியமைப்பு நிர்வாகத்தின் பணியாளர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனைத் தொடர்ந்து 04.08.2026 அன்று தலைமையகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில், ஓய்வு பெறும் நாளில் பதவி உயர்வு பெற்ற ஐந்து பொறியாளர்களும் கலந்து கொண்டு, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், வாரிய தலைவர் அவர்களுக்கும், பணியமைப்பு நிர்வாகத்தினருக்கும், அனைத்து வாரிய உறுப்பினர்களுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்து மகிழ்ந்தனர்.

2012 நேரடி நியமன பொறியாளர்கள் தொடர்ந்த முன்னுரிமை சம்பந்தமான நீதிமன்ற வழக்கின் மேல்முறையீட்டு வழக்கு, கடந்த 05.08.2026 அன்று மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

மேல் முறையீட்டு வழக்கில் மெரிட் சீனியாரிட்டியில் பதவி உயர்வு வழங்கக் கூடாது என்றும், ஏற்கனவே வழங்கப்பட்ட பதவி உயர்வுக்கு தடை உத்தரவு கோரியும் பாதிக்கப்பட்ட 2012 நேரடி நியமன பொறியாளர்கள் இருவர் சார்பாக வாதிடப்பட்டது.

பொறியாளர் சங்கத்தின் சார்பில் மூத்த வழக்கறிஞர் திரு.T.லஜபதிராய் அவர்கள் ஆஜராகி, இந்த முன்னுரிமை சம்பந்தமான வழக்கு, 2012 நேரடி நியமன பொறியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், உள்முகத்தேர்வின் மூலம் பணியேற்பு செய்த உதவிப் பொறியாளர்களுக்கும், இளநிலை பொறியாளர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், பதவி உயர்வு நடவடிக்கைகளுக்கு தடை உத்தரவு ஏதும் வழங்கக்கூடாது என்றும், அழுத்தமான வாதங்கள் எடுத்துரைக்கப்பட்டது.

நமது தரப்பு வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதி இவ்வழக்கு சம்பந்தமான நேரடி நியமன பொறியாளர்கள் 10 நபர்களுக்கு மட்டும் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தார். நமது உறுப்பினர்களின் பதவி உயர்வு நடவடிக்கைகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் திறம்பட செயல்பட்ட, நமது வழக்கறிஞர் குழுவிற்கு சங்கத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை / இயந்திரவியல் பதவி உயர்வுக்கு தொடர்ந்து DPC நடவடிக்கைகளை இறுதி செய்ய வலியுறுத்தப்பட்டு வருகிறது. தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளநிலை பொறியாளர் / இரண்டாம் நிலை (மின்னியல்) பதவி உயர்வுக்கான தகவல்கள் ஏறத்தாழ முழுமை அடைந்துள்ளன. பதவி உயர்வு நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப்படும்.

காலியாக உள்ள அனைத்து செயற்பொறியாளர் பணியிடங்களுக்கும் பதவி உயர்வு உத்தரவுகள் வழங்கிட தொடர்ந்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இளநிலை பொறியாளர் முதல் நிலை (மின்னியல்) பதவி உயர்வுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்டிட சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. பணியமைப்பு நிர்வாகத்தால் தொடர்ந்து தாமதப்படுத்தபட்டு வருவது குறித்து வாரியத் தலைவர் அவர்களிடம் விரிவான முறையீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பட்டியல் கேட்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

24.08.2026 அன்று வாரியத் தலைவர் அவர்களை சந்தித்து நீண்டகாலமாக நிலுவையிலிருக்கும், இளநிலை பொறியாளர் முதல் நிலை (இயந்திரவியல்) பதவி உயர்வு குறித்தும், அதற்கு தடையாக உள்ள நீதிமன்ற நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டியும், இளநிலை பொறியாளர் முதல் நிலை மின்னியல் பதவி உயர்வு வழங்க வேண்டியும், விநியோக பிரிவுகளில் குறிப்பாக சென்னை போன்ற பெருநகரங்களில் FOC Centre களை மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும், விநியோகப் பிரிவுகளில் தற்காலிகமாக பணியாளர்களை நியமிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் 13.08.2026 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்ய முடிவெடுக்கப்பட்டது.

1. ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தினை முழுமையாக தனியார் மூலம் செயல்படுத்துவதை கைவிட்டு விட்டு, CAPEX முறையில் வாரியத்தின் மூலம் வாரிய பணியாளர்களைக் கொண்டு படிப்படியாக கொண்டு வருதல்.

2. மின்வாரியத்தின் சுதந்திரமான செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வாரிய ஆணை 02, நாள்:12.04.2022 முழுமையாக ரத்து செய்தல்.
3. பணிக்கொடை உச்சவரம்பினை தமிழக அரசின் பணியாளர்களுக்கு அனுமதித்ததை போல் 20 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உடனடியாக உயர்த்தி வழங்குதல்.
4. FSFS திட்ட பணப்பயனை தமிழக அரசுக்கு இணையாக 3 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தியதை அரசாணை நாள் முதல் முன் தேதியிட்டு அமல்படுத்திட.
5. 2020 ஆம் ஆண்டு கோவிட் பெருந்தொற்று காலத்தில் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு மின்வாரியத்தில் நிறுத்தப்பட்ட தொழிலாளர் உரிமைகளை (தமிழக அரசு மீண்டும் திரும்ப அளித்து அரசாணை வெளியிட்டது போல) மின்சார வாரியத்திலும் திரும்ப வழங்கிட வேண்டும்.
6. திருமணத்திற்கான முன்பணத்தை 5 லட்சமாக தமிழக அரசு உயர்த்தி கொடுத்ததை போல மின்வாரியத்திலும் அளித்திட வாரிய உத்தரவு வழங்கிட வேண்டும்.

புதிதாய் பொறுப்பேற்றுள்ள இயக்குனர் / தொழில்நுட்பம் / TNPGCL பொர்.E.ஜான் டால்டன்., அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. மேலும் மின் உற்பத்தி நிலையங்களில் குறைந்தபட்ச மதிப்பீடு கொண்ட டெண்டர்களுக்கு மதிப்பீட்டு கமிட்டியின் தணிக்கைக்கு உட்படுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க டெண்டர் விதிகளில் திருத்தங்கள் செய்திடவும், மேட்டூர் அனல் மின் திட்டங்களில் உள்ள குடியிருப்பு ஒதுக்கீடு சம்பந்தமான குறைபாடுகளை களைந்திடவும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

நன்றி,

பொர்.V.S.சம்பத்குமார்,
பொதுச் செயலாளர்

# பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

**கீழ்க்கண்ட பொறியாளர்கள் 31.07.2026 அன்று வாரிய பணியில் இருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல் நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.**

1. **Er. S.NATARAJAN,** EE /O&M /Alangudi,Branch President /Pudukottai, Pudukkottai Branch. 97900 04463
2. **Er. R.SIVAKUMAR,** AEE / East Santhavasal,VP/Thiruvannamalai, Thiruvannamalai Branch. 8675398801
3. **Er. G.PRABHAKARAN,** AEE / Shift / 230 KV SS / Athipattu, Former Branch Treasurer, Chennai North Branch. 9840185672
4. **Er. V.GUNASEKARAN,** JE I/Elec./O&E / MTPS 1,Former Org. Secy. /MTPS, MTPS Branch. 8300750748
5. **Er. N.RAVICHANDRAN**, AEE / O&M / Koppampatty, Trichy Branch. 9443504959
6. **Er. K.KUMAR,** AEE / O&M / Salai, Vellore Branch. 94434 79515
7. **Er. M.KARTHIKEYAN,** AEE / Elec. / O&E / MTPS 1, MTPS Branch. 9488350311
8. **Er. S.V.AMUTHAINBAN,** AEE / RAPDRP / C.Office / Nagai, Nagai Branch. 9443874435
9. **Er. U.SIVAKUMAR,** AEE / O&M / South / Nagai, Nagai Branch. 7598475124
10. **Er. N.GANTHIMATHI,** AEE / 230 KV SS / Ayikudi, Tirunelveli Branch. 9486957543
11. **Er. M.RAMARAJ**, AEE / 230 KV WF SS / Veeranam, Tirunelveli Branch. 8248906590
12. **Er. S.JANARTHANAM,**AEE/Shift / 230 KV SS / Ariyaperumbakkam, Kanchipuram Branch. 9443073108
13. **Er. S.RAJAPPAN,** AEE / Shift / 230_110 KV SS / Gurubarapally, Krishnagiri Branch. 9443725584
14. **Er. S.CHANDRAN,** AEE.NI / Mech. / CAD / TTPS, TTPS Branch. 94861 69668
15. **Er. M.RAJASEKARAN**, JE I / Spl. Mtce. / Nagai, Nagai Branch. 9787093927
16. **Er. E.THULASI,** JE I / Shift / 110 KV SS / Villupuram, Villupuram Branch. 9025628553
17. **Er. P.DEVALINGAM,** AEE / Rural / Valavanur, Villupuram Branch. 6380681711
18. **Er. S.ARUL,** AEE / 110_11 KV SS / Elumalai, Madurai Branch. 9994892877
19. **Er. K.BASKARAN**, AEE / Training Centre / Pasumalai, Madurai Branch. 9894278786
20. **Er. J.SATHYABAMA**, JE I / 110_22 KV SS / Chinnakkampatty, Dindigul Branch. 80566 52967

**VOLUNTARY RETIREMENT**

21. **Er. S.LAWRENCE**, JE I / Mtce, / 230 KV SS / Pirattiyur, Trichy Branch. 9443674313 (As on 15.07.2026).
22. **Er. C.SENTHILKUMAR**, AEE / O&M / Ammapettai, Former Jt. Secretary / Gobi, Gobi Branch.

## OUR REPRESENTATIONS

To
**THE MANAGING DIRECTOR**
**TANTRANSCO**
Chennai - 600 002.
Lr.No.GS/TNEBES/F1/D.11/2026 , Dated. 13.08.2026

Respected Madam,

**Sub:** Hiccups faced in Operation Circles due to ERP – Flow of work affected extensively – Implementation of decisions arrived in discussion yet to be taken up –Intervention of respected MD requested - Regarding

Hiccups are being faced in Operation Circles both in 230 & 110 KV substations in the aftermath of ERP implementation. Improper mapping is one of the reasons due to which flow of work is affected extensively, stores transaction and fund flow is totally stalled.

Above narrated problems have been addressed by our Sangam to the authorities concerned numerous times. Based on our representation intense discussion was held involving the officials concerned on 10.07.2026.

The following points are discussed :

1. The work flows of the 110 KV substations are mapped directly from the concerned AE/ JE to the EE / Operation and to the concerned SE/ Operation.

Decision taken:

For smooth operation of 110kV substation, AE/JE/Maintenance/110kV SS to be mapped with concerned AEE/O&M, EE/O&M and respective AO/ O/o SEs/Operation for normal workflow for vendor payment.

For stores transaction of 110kV substation, AE/JE/Maintenance/110kV SS to be mapped with concerned AEE/O&M, EE/O&M and to the stores.

2. Since adequate staff is not available in Superintending Engineer/Operation/ Sriperumbudur and Chennai South, The vendor bill passing could not be made and pending for a longer period.

Decision arrived:

The concerned EDCs who were looking after the accounts of these operation circles should continue to pass the bills and make the payments, till the accounts staff is posted for these Operation circles.

3. Staff payments other than salary.

Decision arrived:

The concerned EDCs who were looking after the accounts of these payments to pass the bills and the payments has to be made directly from the head quarters to the Employee bank account as done in TNPDCL.

4. Delay in processing of Imprest:

Decision arrived:

Imprest should be posted in ERP by the concerned circles and payment of imprest to be made by the headquarters to the circles, without waiting for manual fund indent.

5. Payment of the Union subscription / Donation deducted from the staff.

Decision arrived:

The payment for the amount deducted from the staff has to be made directly to the concerned Unions from the TANTRANSCO Head quarters accounts wing as in TNPDCL / TNGECL / TNPGCL.

The decisions taken in the discussion are yet to be implemented even after a lapse of one month. Hence problem in the Operation Circles still exists affecting the Board works.

Hence we request the intervention of the respected Managing Director / TANTRANSCO in this matter requesting necessary orders on the decision arrived during the discussion on 10.07.2026 so as to ensure smooth functioning in the Operation Circles please.

Thanking you, Madam,

Yours sincerely,
**( V.S.SAMPATHKUMAR )**
General Secretary.

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL,
Chennai - 600 002.
Lr.No.GS/TNEBES/F1/D.12/ 2026, Dt.19.08.2026.
Respected Sir,

Sub: Huge vacancies in Assistant Engineer / Junior Engineer / Electrical I Grade posts – Promotions of Junior Engineer / Electrical I Grade posts pending for quite long creating huge backlog in the category – Assurances given to our Sangam in this regard not complied with – Intervention of respected CMD requested for calling for of fresh Panel - Regarding.

Assistant Engineer / Junior Engineer I Grade posts are the Section Officers Post in Distribution and other areas existing in the Board. While the Assistant Engineer posts are filled up by Engineering Degree holders through Direct Recruitment or by Promotion through Internal Selection, The Junior Engineer I Grade post is the 2$^{nd}$ promotion of the Diploma Engineers from the category of Junior Engineer Grade II who enter the Board as Technical Assistant.

Both these categories of Assistant Engineer / Junior Engineer I Grade are of the same pay scale and interchangeable. Moreover they are governed by the ratio of 2:3 among them respectively on the sanctioned posts. This ratio is prevalent in the Board for quite few decades. Then and there problems creep up due to imbalance in filling up of these posts and most of the times it is the Junior Engineer I Grade category which are at the receiving end.

Similar situation exists presently, as there is huge backlog in Junior Engineer / Electrical I Grade posts. Our Sangam has been continuously representing this matter to the respected Chief Engineer / Personnel insisting calling for of suitability for Junior Engineer I Grade posts. But the Chief Engineer / Personnel has turned deaf ears in this matter so far. The attitude of the Personnel Administration has been brought to the notice of the respected Chairman cum Managing Director and his instructions too have not been complied with by the Chief Engineer / Personnel purposely.

This is just step motherly treatment being meted out to the Diploma Community time and again. Our community which toils tirelessly day in and day out for the wellbeing of the Board is not rewarded suitably. Even the genuine promotions of our members are denied always. The Chief Engineer / Personnel denying our legitimate Promotions despite insistence of the respected Chairman cum Managing Director is highly paining. We bring this matter to the present respected Chairman cum Managing Director for kind consideration.

The mammoth promotions of Assistant Executive Engineer / Electrical recently have created as huge vacuum in the Assistant Engineer / Junior Engineer I Grade posts. Filling up of these posts considerably through the Junior Engineer / Electrical I Grade posts will considerably aid the wellbeing of the Board apart from the individuals.

Hence we request the intervention of the respected Chairman cum Managing Director in this matter requesting to instruct the Chief Engineer / Personnel towards calling for of fresh Panel for Junior Engineer / Electrical I Grade posts at the earliest for the wellbeing of the Board and the upliftment of the individuals and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S.SAMPATH KUMAR)**
General Secretary.



பொறியாளர் சங்க
உறுப்பினர்கள் அனைவருக்கும்
விநாயகர் சதுர்த்தி மற்றும்
கிருஷ்ண ஜெயந்தி தின
நல்வாழ்த்துக்களை
பொறியாளர் சங்கம்
தெரிவித்துக்கொள்கிறது.



## உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு

அன்பு உறுப்பினர்களே வணக்கம்.

இந்த ஆண்டு பொறியாளர் சங்கம் பெற்ற பதவி உயர்வுகளில் உதவி செயற் பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கடந்த ஆண்டு 21.08.2025 அன்று 2012ஆம் ஆண்டின் உதவிப் பொறியாளர்களில் 616 நபர்கள், அதற்கு இணையாக இளநிலை பொறியாளர்கள் முதல் நிலையில் 216 நபர்களுக்கும் தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டிருந்தது.

இதற்காக PAR மற்றும் Suitability Reportகளை பெறுவது இறுதி நிலை எட்டியபோது, 2012 உதவிப்பொறியாளர் நேரடி நியமனம் பெற்ற சிலரால் மதுரை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டு, உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நமது மின்வாரியத்திலும் முன்னுரிமையினை Roaster முறையிலிருந்து மாற்றி Merit அடிப்படையில் 2012ல் பணியேற்ற நேரடி நியமனம் பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு மாற்றிட வேண்டும் எனவும், அதுவரை உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு வழங்ககூடாது என்ற தடையுத்தரவும் கோரியது. உயர்நீதிமன்றம் வழக்கில் தடையுத்தரவு வழங்கியது.

முன்னுரிமை உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி மாற்றப்பட வேண்டுமா என்பதில் அரசிடமிருந்து எந்தவித தெளிவுரையும் நமது நிர்வாகத்திற்கு வராத காரணத்தினால் பதவி உயர்வு வழங்குவதில் தடை நீடித்துக் கொண்டே சென்றது.

உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வுக்கான பட்டியலில், நேரடி நியமன உதவிப் பொறியாளர்களோடு, நமது உள்முகத் தேர்வு உதவிப்பொறியாளர்களும், இளநிலை பொறியாளர்களும் இருந்தனர். பதவி உயர்வு தாமதப்பட்டு வரும் ஒவ்வொரு மாதமும் நமது இளநிலை பொறியாளர்களில் சிலர் பதவி உயர்வு பெறாமலே பணிஓய்வு பெற்றுவந்த நிலை தொடர்ந்தது. தடையுத்தரவினை நீக்கும் விதமாக நம் சார்பில் 2010 மற்றும் 2011ல் உள்ள உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்களை கொண்டு மதுரை நீதிமன்ற வழக்கில் நம்மை இணைத்துக் கொண்டு தடையுத்திரவினை நீக்கிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது.

மதுரை வழக்கில் வாதங்கள், தொடர்ந்த நிலையில் நமது சார்பில் மூத்த வழக்கறிஞர் திரு.T.லஜபதிராய் அவர்கள் வாதாடினார். இவ்வழக்கு 2012ஆம் ஆண்டின் நேரடி நியமனம் பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கான முன்னுரிமையை பற்றிதான் என்றும் இதில் உதவிப்பொறியாளர் (உள்முகத் தேர்வு)க்கும், இளநிலை பொறியாளர் (முதல் நிலை)யில் உள்ளோர்க்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே நீதிமன்ற தடையுத்தரவினை முழுவதுமாக நீக்கிட வேண்டும் என்ற வாதம் அழுத்தமாக வைக்கப்பட்டது.

வழக்கின் இறுதியில், உதவிப்பொறியாளர் மின்னியல் (நேரடி நியமனம்) பெற்றவர்களுக்கான முன்னுரிமை Merit அடிப்படையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும், இந்த பதவி உயர்வு பட்டியலில் உள்ள மற்ற பிரிவினர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு எந்தவித தடையுமில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இத்தீர்ப்பின்படி 2012 உதவி பொறியாளர்களுக்கு முன்னுரிமை மாற்றப்பட வேண்டியிருந்த நிலையினால், பதவி உயர்வு தாமதப்படும் என்பதினால், 2010 மற்றும் 2011ல் உள்ள உதவி பொறியாளர்களுக்கும், இதற்கு இணையாக இளமின் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட வேண்டும், நமது இளமின் பொறியாளர்கள் பணிஓய்வு பெற உள்ளார்கள் என்பதினையும் கருத்தில் கொண்டு பதவி உயர்வு வழங்கிட தொடர்ந்து வலியுறுத்தினோம்.

இருந்தும் பணியமைப்பு நிர்வாகம், 2012ல் உள்ள உதவிப்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்று, நீதிமன்ற தீர்ப்பிற்கு முரணாக செயல்பட்டது. இதனால் நமது பதவி உயர்வும் பாதிக்கப்படும் என்பதினை பல்வேறு உயர்மட்ட அதிகாரிகளிடம் விளக்கி கூறினோன்.

30.05.2026 அன்று எல்லா நியாயங்களையும் உதாசீனப்படுத்தி அனைத்து தரப்பினருக்கும் பதவி உயர்வு வழங்குவதை பணியமைப்பு நிர்வாகம் நிறுத்திவிட்டது. நமக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வு மறுக்கப்பட்ட நிலையில், அன்று இரவு நமது மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களிடமும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடமும் நமது நியாயமான கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் மூலமாக நீதிமன்ற வழக்குகளின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டு 31.05.2026 அன்று ஓய்வு பெறவிருந்த 4 இளநிலை பொறியாளர் / முதல் நிலை பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என்பதினை வலியுறுத்தினோம்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு இவ்விவரங்கள் விவரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அமைச்சர் அவர்கள் உடனடியாக பதவி உயர்வு வழங்கிட உத்திரவிட்டுள்ளார் என்பதினை இரவு 10 மணியளவில் நேர்முக உதவியாளர் அவர்களால் நமது பொதுச்செயலாளர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. 31.05.2026 அன்று ஓய்வு பெற இருந்த 4 இளமின் பொறியாளர் முதல் நிலை உட்பட 117 நபர்களுக்கு அன்றே பதவி உயர்வு வழங்கப்பட்டது.

பணிஓய்வு பெறும் நாளில் பதவி உயர்வு பெற்ற 4 இளநிலை பொறியாளர்கள் சென்னைக்கு நேரடியாக வந்துருந்து மின் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்த நெகிழ்ச்சியான நிகழ்வு நடைபெற்றது. பின்னர் மின்வாரிய தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. மின்துறை அமைச்சர் அவர்களும், நமது வாரியத்தலைவர் அவர்களும், ‘‘உங்களது சங்கத்துக்கு நன்றி சொல்லுங்கள்’’ என்று அவர்களிடம் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து 2012ஆம் ஆண்டு உதவி பொறியாளர்களின் முன்னுரிமை மாற்றியமைக்கப்பட்டு, கூடுதலாக 266 உதவி பொறியாளர்ளுக்கும் மற்றும் 127 இளநிலை பொறியாளர்ளுக்கும் பதவி உயர்வுக்கான பட்டியல் கேட்கப்பட்டது. இதிலும் பட்டியல் இறுதி செய்யும் நேரத்தில் 31.07.2026 அன்று ஓய்வுபெற இருந்த 5 இளநிலைப் பொறியாளர்கள் முதல் நிலை பொறியாளர்களுக்கு பதவி உயர்வு பெற்று தரவேண்டிய கடமை பொறியாளர் சங்கத்திற்கு இருந்தது.

இதனை விரைந்து பெற்றிட மாண்புமிகு மின்துறை அமைச்சர், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், இயக்குநர்/ விநியோகம், தலைமை பொறியாளர்/ பணியமைப்பு அவர்களிடம் தொடர்ந்து முறையிட்டு, பல்வேறு தடைகளை தகர்த்து, இந்த 5 பொறியாளர்கள் உட்பட 700 பொறியாளர்களுக்கு பதவி உயர்வு பெற்றுதரப்பட்டது. இந்த 5 பொறியாளர்களும் உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்று மனநிறைவுடன் பணிநிறைவு பெற்றனர்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு, மின் வாரிய தலைமையகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் இப்பொறியாளர்கள் கலந்து கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

பதவி உயர்வு வழங்கிய பிறகும், 05.08.2026 நீதிமன்றத்தில் 2012 உதவிப் பொறியாளர் நேரடி நியமனம் பெற்றவர்களின் முன்னுரிமை குறித்த மேல் முறையீடு வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கில் பதவி உயர்வுக்கு தடையும் கோரப்பட்டது. இவ்வழக்கிலும் நமது மூத்தவழக்குறைஞர் திரு.T.லஜபதிராய் அவர்கள் வாதாடி முழு தடை உத்தரவு வராமல், நேரடி நியமனம் பொறியாளர்களில் வழக்கில் சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் தவிர்த்து மற்ற பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வருவதற்கு வழிவகுத்தார்.

இப்பதவி உயர்வில் ஒரு சிறப்பான நடவடிக்கையினை பொறியாளர் சங்கம் முன்னெடுத்து வெற்றி கண்டுள்ளது. மொத்தமாக வழங்கப்பட்ட 817 பதவி உயர்வுகளில் நமது உறுப்பினர்கள் மட்டும் 525 நபர்கள் என்பதினை நாம் நினைவில் கொண்டு பெருமைப்படவேண்டும்.

பொறியாளர் சங்கத்தின் சார்பில் பதவி உயர்வு பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி உயர்வு நன்கொடையாக குறைந்தபட்சமாக ரூ.5000/–வழங்கிட கேட்டுக்கொள்கிறேன். பதவி உயர்வுகள் இத்துடன் முடிந்துவிடுவதில்லை. பட்டய பொறியாளர்களின் பதவி உயர்வுக்கான வழக்குகளும், அதற்கான செலவுகளும் அப்படியே... இது ஒரு தொடர் போராட்டம்.. சங்கம் போராட சளைத்ததில்லை... வெற்றியும் நமக்கு கிடைக்காமல் போனதில்லை... வாழ்க பொறியாளர் சங்கம்.

நன்றி

**பொர்.N.R.செந்தில்**
பொதுப் பொருளாளர்

**July Power Consumption Jumps10.9% as Humidity Fuels AC Demand across India**

New Delhi: India's power consumption grew 10.93 per cent year-on-year to 170.70billion units (BU) in July, official data showed, as high humidity levels pushed up use of cooling appliances like air conditioners in many parts of the country.

The country's total power consumption was 153.88 BU in July 2025.The higher feel-like temperature than actual, caused by humid conditions across the county, increased use of cooling appliances like air conditiomers, there by increasing power demand and consumption, experts said.

The peak power demand also jumped to 270.20 GW last month from 220.74 GW in July 2025. The peak power demand in July hovered almost around the all-time record high of 270.82 GW seen in May.

The power demand in May last year was 230.99 GW. Last summer, the peak power demand was 242. 77 GW, recorded in June 2025, but stayed below the government's estimate of 277 GW.

Experts said power demand will remain steady in August as well, with continued humid conditions in the ongoing monsoon.

**Thanks: The Economic Times, 02.08.26**

# ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின்
# 5வது மாநில பொதுக்குழு கூட்டம்

தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 5வது மாநில பொதுக் குழு கூட்டம்15.08.2026 ல் மதுரை, ஹோட்டல் தமிழ் நாடு (பாண்டியன்)–ல் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவங்கியது. பொர்.P.குமார், மதுரை மண்டல இணைச் செயலாளர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து கடந்த ஆண்டில் மறைந்த பொறியாளர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொர்.S.ஜெயசிங் ராஜா அவர்கள் தமது தலைமை உரையில் சங்கம் வளர்த்த மதுரையில் ஐந்தாவது மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெறுவது மிகவும் சிறப்பு என்றும், இந்த பொதுக்குழுவில் பொறியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர், பொதுச்செயலாளர், பொதுப்பொருளாளர் உட்பட அனைத்து மாநில பொறுப்பாளர்களும் கலந்து கொண்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருவதாகவும் தனது உரையில் குறிப்பிட்டார். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வாழ் நாள் சான்றிதழ் (Life Certificate) குறித்த காலத்தில் அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மருத்துவ காப்பீடு திட்டத்தில் நம் உறுப்பினர்கள் உடனடியாக பயன் பெறும் பொருட்டு NHIS உதவி மைய பொறுப்பாளரை தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்தும், 2025 – 2026 நிதி ஆண்டில் வருமான வரி சட்டத்தின்படி ஓய்வூதியத்தில் மாதாந்திர வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் Form 16 கொடுக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்தார். மருத்துவ காப்பீடு திட்டம் 2026 வடிவமைக்கும் முன் ஓய்வூதியர்கள் அமைப்புகளுடன் ஆலோசனை செய்து முடிவெடுக்கும் படி வாரியத்தலைவரிடம் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின் போது பணித்தொகுதி 1 மற்றும் 2 பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை என அறிவித்த போது, தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு அறிவித்த அனைத்து நேரடி நடவடிக்கைகளிலும் பொறியாளர் சங்கத்துடன் இணைந்து தலைமையகத்தில் TNEBRES மாநில பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்றும், வட்ட அளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் TNEBRES பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்றும் தெரிவித்தார். வரும் காலகட்டத்தில் நமது உரிமைகளை காத்து கொள்ள அனைவரும் இணைந்து, நம்மை வலிமை படுத்தி கொண்டு செயல்பட கேட்டு கொண்டார்.

பொதுச் செயலாளர் பொர். ஆர். வள்ளி ராஜன் அவர்கள் தனது உரையில் கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பட்டியலிட்டு, ஒவ்வொரு நிகழ்விலும் சிறப்பாக செயல்பட எடுக்கப்பட்ட முயற்சிகளையும், உறுப்பினர்களின் குறைபாடுகள் எவ்வாறு களையப்பட்டது என்பதனையும் தெளிவாக எடுத்துரைத்தார். மண்டல கூட்டங்களையும், வட்ட அளவில் மாதாந்திர கூட்டங்களையும் சிறப்பாக நடத்திய பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், அவற்றிற்கு உறுதுணையக இருந்தபொறியாளர் சங்க மண்டல பொறுப்பாளர்களுக்கும்,கிளை பொறுப்பாளர்களுக்கும் நன்றியை தெரிவித்தார்.சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்திட தொடர்ந்து தொய்வின்றி மாதாந்திர கூட்டம் நடத்துவதென்றும், சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அடுத்த பொதுக்குழுவிற்கு முன் உயர்த்திட அனைவரும் இணைந்து செயல்பட கேட்டுக்கொண்டார். மண்டல பொறுப்பாளர்கள் செயலாளர் / மண்டலம் (Secretary / Region) என்றும், வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், செயலாளர் / வட்டம் (Secretary/Circle) என்றும் மாற்றம் செய்யலாம் என்றும், தலைமை நிலைய பணிகளை கையாளும் பொருட்டு செயலாளர்/தலைமை நிலையம் பதவி உருவாக்கிடவும், நிர்வாக காரணங்களுக்காக ஈரோடு மண்டலத்தை இரண்டாக பிரித்து, ஈரோடு மற்றும் சேலம் மண்டலம் என்றும் செயல்பட செய்யவும், திருச்சி மண்டலத்தை இரண்டாக பிளீத்து, திருச்சி மற்றும் புதுக்கோட்டை மண்டலம் என்றும் செயல்படுத்தலாம் என்றும் முன்மொழிந்தார்.

பொது பொருளாளர் S.மணிவாசகன் தனது அறிக்கையில் 2025 – 2026 நிதி ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையினையும், இந்த நிதி ஆண்டில் 31.07.2026 வரையிலான வரவு, செலவு அறிக்கையினையும், தெரிவித்து, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ல் கணக்கு முடிக்கப்பட்டு வருமான வரி படிவங்களும் உரிய காலத்தில் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.சங்க வரவில் ஒருபகுதி நிரந்தர வைப்பு நிதியில் *TNPFC*ல் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். வருங்காலத்தில் உறுப்பினர்கள் சங்கத்திற்கு சந்தாவோ, நன்கொடையோ அனுப்பும் போது, ரசீது தயாரிக்க ஏதுவாக தங்களது சுய விவரங்களையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

அறிக்கைக்கு பின் உறுப்பினர்களின் கருத்து கேட்கப்பட்டது 27 உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.உறுப்பினர் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் பதிலுரைக்குப் பின் பொதுக்குழு, பொதுப்பொருளாளர், பொதுச்செயலாளர் அறிக்கைகயை கரவொலி எழுப்பி ஏற்று கொண்டது.

1. ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கத்தின் மண்டல பொறுப்பாளர்கள் செயலாளர் / மண்டலம் (Secretary / Region) என்றும், வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், செயலாளர் / வட்டம் (Secretary/Circle) என்றும்
2. தலைமை நிலைய பணிகளை கையாளும் பொருட்டு செயலாளர்/தலைமை நிலையம் பதவி உருவாக்கிடவும்

3. நிர்வாக காரணங்களுக்காக ஈரோடு மண்டலத்தை இரண்டாக பிரித்து, ஈரோடு மற்றும் சேலம் மண்டலங்களாகவும்மற்றும், திருச்சி மண்டலத்தை இரண்டாக பிரித்து, திருச்சி மற்றும், புதுக்கோட்டை மண்டலங்களாக செயல்படவும் பொதுக்குழுவில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்ற ஆண்டு பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி 70 வயதை கடந்த மூத்த பொறியாயளர்களுக்கு சால்வை அணிவித்து, கேடயம் வழங்கி கவுரவிக்கப்பட்டார்கள். பொது குழுவில் கலந்து கொண்ட பொறியாளர் சங்க அனைத்து பொறுப்பாளர்களுக்கும் மரியாதை செய்யப்பட்டது. மதுரையில் பொதுக்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த மதுரை மண்டல செயலாளர் P.குமார், மதுரை வட்ட செயலாளர் D.பாண்டி குமார்,அமைப்பு செயலாளர் S.வீரப்பன் ஆகியோரும் பொன்னாடை அணிவித்து கவுரவிக்கப்பட்டார்கள். மேலும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு சுற்றுலா துறை முன்னாள் உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கும் மரியாதை செய்யப்பட்டது.ஹோட்டல் தமிழ்நாடு திடலில் சுதந்திர தின விழாவை, நம் உறுப்பினர்களோடு சிறப்பாக நடத்தி ,விழாவில் ஓய்வுபெற்ற பொறியாளர் சங்க பொதுச்செயலாளர் கொடி ஏற்றி விழாவை சிறப்பிக்க ஏற்பாடு செய்த ஹோட்டல் தமிழ்நாடு எக்ஸிகியூடிவ் திரு. சீனிவாசன் அவர்களுக்கும், ஒலி அமைப்பை சிறப்பாக செய்த திரு பாண்டியன் அவர்களுக்கும் மரியாதை செய்யப்பட்டது.சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பொறியாளர் சங்க பொதுப்பொருளாளர் அவர்களுக்கு TNEBRES பொதுப்பொருளாளர் அவர்களும், பொறியாளர் சங்க பொதுச்செயலாளர் அவர்களுக்கு TNEBRES பொதுச்செயலாளர் அவர்களும், பொறியாளர் சங்க மாநிலத்தலைவர் அவர்களுக்கு TNEBRES ன் தலைவர் அவர்களும் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.

அதன் பின் பொறியாளர் சங்க பொதுப்பொருளாளர் பொறிஞர்.N.R.செந்தில் தமது சிறப்புரையில் சிறப்பாக செயல்படும் ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் பணி வருங்காலத்தில் அவசியம் தேவை என்பதால் சங்கத்தை, அமைப்பு ரீதியாகவும், பொருளாதாரத்திலும் இன்னும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் ஒவ்வொரு மாதமும் சுமார் 20 பொறியாளர்கள் பணி ஓய்வு பெற்று, சங்கத்திலிருந்து ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கத்திற்கு மாறுதல் ஆகின்றனர் என்றார். ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று பெருமிதம் கொண்டார்.

பொறியாளர் சங்க பொதுச்செயலாளர் பொறிஞர்.V.S.சம்பத்குமார் தமது சிறப்புரையில் ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம் தன் பணிகளை சிறப்பாக செய்வதால்,பொறியாளர் சங்கத்தின் பணிச்சுமை சற்று குறைந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டினார். பொறியாளர் சங்கம் மேற்கொண்ட போராட்டங்களில் ஓய்வு பெற்ற பொறியாளர்களின் பங்கு சிறப்பாக இருந்ததை சுட்டிக்காட்டினார். சிறப்பாக செயல்படும் ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தை பாராட்டியும், இன்றைய நிலையில் வாரியம் செயல்பாடு எப்படி உள்ளது என்றும், வரும் காலங்களில் நாம் சந்திக்க போகிற பிரச்சனைகளையும் பட்டியலிட்டார். ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்க வேண்டிய அடையாள அட்டையை வாரியம் விரைவில் வழங்கிட முயற்சி எடுத்திட கேட்டுக்கொண்டார். வரும் காலங்களில் நாம் பெற்று வரும் உரிமைகளை தக்கவைத்து கொள்ள அனைவரும் ஒன்றுப்பட்டு செயல்படவேண்டிது அவசியம் என அறிவுறுத்தினார்.

பொறியாளர் சங்க மாநிலத்தலைவர் பொறிஞர். A. அந்தோணி படோவராஜ் தமது சிறப்புரையில் ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கம் தொடக்கம்; பின் முதல் பொதுக்குழு கூட்டத்தில் பொறியாளர்களின் பங்களிப்பு; தற்போது ஐந்தாவது பொதுக்குழுவில் பொறியாளர்களின் பங்களிப்பு ஆகியவற்றை ஒப்பிட்டு, நமது சங்க வளர்ச்சிக்கு அயராது செயல்படும் பொறுப்பாளர்களை பாராட்டினார். கடந்த எட்டு ஆண்டுகளில் பெரும்பான்மையான உறுப்பினர்களை இணைந்திருப்பது மிக பெரிய பணி என்றும் ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் ஆரம்பகால நிலை முதல் இன்றைய தினம் வரை சங்கம் எடுத்து வரும் சிறந்த நடவடிக்கைகள் குறித்தும், வரும் காலத்தில் நாம் பணியாற்ற வேண்டிய அவசியத்தை பற்றியும் விரிவாக உரையாற்றினார். மேலும் கடந்த காலங்களில் பொறியாளர் சங்கம் மேற்கொண்ட போராட்டங்கள் பற்றியும், அதில் அன்றைய பொறியாளர் சங்க உறுப்பினர்களாக இருந்து, இன்றைய ஓய்வு பெற்ற பொறியாளர் சங்க உறுப்பினர்களான பின்பும் போராட்டங்களில் பங்கு பெற்ற விதத்தையும், ஒருங்கிணைந்து செயல் பட்டதையும் விளக்கமாக எடுத்துரைத்து, அது போல் வருங்காலங்களில் ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கம் மென்மேலும் வலுவடைய வருங்காலத்தில் நாம் அனைவரும் இணைந்து ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து புதிய பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது. பொறியாளர் சங்க மாநிலத் தலைவர், பொதுச்செயலாளர், பொது பொருளாளர் ஆகியோர் புதிய பொறுப்பாளர் தேர்வை நடத்தினார்கள். புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்று அவையை தொடர்ந்து நடத்தினார்கள். அதனை தொடர்ந்து கீழ் வரும் தீர்மானங்கள் அமைப்பு செயலாளர் S.வீரப்பன் அவர்களால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்:**

1) தமிழ்நாடு அரசின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு திருசி.ஜோசப் விஜய் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கம் தனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

2) தமிழ்நாடு அரசின் மின்துறை மற்றும் சட்டத்துறையின் அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு திரு.C.T.R. நிர்மல் குமார் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கம் தனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

3). தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 01.04.2003–ற்கு பின் பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கும் பழைய ஓய்வூதிய திட்டத்தையே அமுல்படுத்த வேண்டும் என்று இப்பொதுக்குழு அரசையும்,வாரியத்தையும் கேட்டுக்கொள்கிறது.

4). தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் 70 வயதுக்கு மேல் 10 விழுக்காடும், 80 வயதுக்கு மேல் 10 விழுக்காடும் உயர்த்தி வழங்க வேண்டும் என்று இப்பொதுக்குழு அரசையும்,வாரியத்தையும் கேட்டுக்கொள்கிறது.

5) அரசுத் துறை பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஓய்வு பெறும் வாரிய பணியாளர்களுக்கும் 1.1.2024 முதல் பணிக்கொடை (DCRG) ரூ.25 இலட்சமாக முன்தேதியிட்டு அரசனை நாள் முதல் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இப்பொதுக்குழு அரசையும், வாரியத்தையும் கேட்டுக்கொள்கிறது.

6) மருத்துவ காப்பீடு திட்டத்தில் மின்சார வாரிய பணியாளர்கள் முழு பயன்பெற சங்கங்களின் ஆலோசனையுடன் சீரமைப்பு செய்யவேண்டும் என்று இப்பொதுக்குழு வாரியத்தை வலியுறுத்துகிறது.

இறுதியில் துணை பொதுச் செயலாளர், பொர்.S.கனகவேல் அவர்களின் நன்றியுரை மற்றும் நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற பொறியாளர் சங்க 2026 ஆண்டின் புதிய மாநில பொறுப்பாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | S.ஜெயசிங் ராஜா 9962123507 | துணைத் தலைவர் | R. அழகுசபை 9025752227 |
| பொதுச் செயலாளர் | R.வள்ளிராஜன் 9444850820 | துணை பொதுச் செயலாளர் | S. கனகவேல் 8838353166 |
| பொதுப் பொருளாளர் | S.மணிவாசகன் 8072319632 | அமைப்புச் செயலாளர் | S. வீரப்பன் 8220144652 |
| செயலாளர் – நிர்வாகம் | B. நந்தகுமார் 9443525997 | செயலாளர் – தலைமை நிலையம் | T. சுகுமார் 9962300507 |
| மண்டலச் செயலாளர்கள் | | | |
| சென்னை | V. ராமகிருஷ்ணன் 9566103139 | கோயம்புத்தூர் | C.சிவசங்கரன் 9443003115 |
| காஞ்சிபுரம் | C. ருத்ரகுமார் 9444906870 | திருச்சி | C. நரசிம்மன் 8903850694 |
| வேலூர் | R. லோகநாதன் 9443034721 | தஞ்சாவூர் | L. ஞானமணி 9843390601 |
| திருவண்ணாமலை | C. சந்திரசேகரன் 9443803221 | மதுரை | P. குமார் 7010953388 |
| ஈரோடு | K. தங்கவேல் 9842943388 | திருநெல்வேலி | A.பாக்கியராஜ் 9442257549 |
| சேலம் | A.குமரேசன் 9976647777 | புதுக்கோட்டை | K.சகாயராஜ் 9443073867 |

**80–தாவது சுதந்திர தின நிகழ்ச்சியில் மின்சாரத் துறையில் சிறப்பாக பணிபுரிந்தமைக்கு மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டு பெற்ற பொறியாளர்கள்**

1. பொர். J.மலர்வண்ணன் AEE / General cum MM / Central Office / Nagai, முன்னாள் துணைத்தலைவர் நாகை
2. பொர். தன.சபரிநாதன் JE / நகரம் மேற்கு மயிலாடுதுறை, பொதுக்குழு உறுப்பினர் நாகை
3. பொர். ந.ஜனனி உதவி மின் பொறியாளர் கிளியனூர்
4. பொர். M. சேகர், AEE/ Thiruvarur,
5. பொர். K. குமார், JE / வடக்கு திருவாரூர்,
6. பொர். R. வனிதா, JE / வடக்கு மன்னார்குடி
7. பொர். A. கோபால், AE / RI / ராணிப்பேட்டை,
8. பொர். P. மோகன், AE / தோட்டபாளையம்,
9. பொர். G. வெங்கடேசன், AE / SS / மோரூர்




**மின்சார துறையில் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெற்ற பொறியாளர்களை பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

**வாழ்க பொறியாளர் சங்கம்**

## அறிவோம் பொறியாளர் தின வரலாற்றை...

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது உயரமான கட்டிடங்களாலும், அகலமான சாலைகளாலும் மட்டும் அளவிடப்படுவதில்லை. அந்த வளர்ச்சிக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் சிந்தனை, தொழில்நுட்பம், திட்டமிடல் மற்றும் அதைச் செயல்படுத்தும் திறன் ஆகியவையே உண்மையான முன்னேற்றத்தின் அடித்தளமாக அமைகின்றன. அத்தகைய முன்னேற்றத்தின் பின்னால் அமைதியாகப் பணியாற்றுபவர்கள்தான் பொறியாளர்கள். அணைகள் முதல் பாலங்கள் வரை, மின்சார உற்பத்தி முதல் தகவல் தொடர்பு வரை, குடிநீர் முதல் விண்வெளி தொழில்நுட்பம் வரை, இன்று நாம் அனுபவிக்கும் நவீன வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் பொறியாளர்களின் பங்களிப்பு இருக்கிறது.

இந்தியாவின் பொறியியல் வளர்ச்சிக்கு மிகப்பெரிய அடித்தளத்தை அமைத்தவர்களில் முக்கியமானவர் சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யா. அவரது பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதியே இந்தியாவில் தேசிய பொறியாளர் தினமாக கொண்டாடப்படுகிறது.

**செப்டம்பர் 15 – பொறியாளர் தினம் உருவான கதை**

மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யா அவர்கள் 1861 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று கர்நாடக மாநிலத்தில் உள்ள முட்டேனஹள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார். சாதாரண குடும்பத்தில் பிறந்த அவர், தனது அறிவு, கடின உழைப்பு, ஒழுக்கம் மற்றும் விடாமுயற்சியின் மூலம் இந்தியாவின் தலைசிறந்த பொறியாளர்களில் ஒருவராக உயர்ந்தார். அவரது அளப்பரிய சேவைகளைப் போற்றும் வகையில், இந்திய அரசு 1968 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 15 ஆம் தேதியை தேசிய பொறியாளர் தினமாகக் கொண்டாடி வருகிறது.

இந்த நாள் ஒரு குறிப்பிட்ட பொறியாளரை நினைவுகூரும் நாளாக மட்டுமல்லாமல், நாட்டின் வளர்ச்சிக்காக தங்கள் அறிவையும் திறமையையும் அர்ப்பணித்து வரும் அனைத்து பொறியாளர்களையும் கௌரவிக்கும் நாளாகவும் விளங்குகிறது.

விஸ்வேஸ்வரய்யா அவர்கள் முதலில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் புனேயில் உள்ள அறிவியல் கல்லூரியில் சிவில் பொறியியல் பயின்றார்.
அந்தக் காலகட்டத்தில் பொறியியல் என்பது இன்று போல் அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய கல்வியாக இல்லை. இருந்தபோதிலும், தனது கல்வியையும் அறிவையும் நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் தொடர்ந்து பயணித்தார். அவரது வாழ்க்கை இன்றைய இளம் தலைமுறைக்கு ஒரு முக்கியமான பாடத்தைச் சொல்கிறது: "கல்வி என்பது பட்டம் பெறுவதற்காக மட்டுமல்ல; சமூகத்திற்கு பயனுள்ள மாற்றத்தை உருவாக்குவதற்காகவும் இருக்க வேண்டும்."

**அணைகளில் தொடங்கி நாட்டின் வளர்ச்சி வரை**

விஸ்வேஸ்வரய்யாவின் பொறியியல் திறமை முதன்மையாக நீர்வள மேலாண்மை மற்றும் அணைத் திட்டங்களில் வெளிப்பட்டது. மைசூரில் அமைக்கப்பட்ட புகழ்பெற்ற கிருஷ்ணராஜ சாகர் (KRS) அணை திட்டத்தில் அவர் முக்கிய பங்காற்றினார். அந்தத் திட்டம் விவசாயம், குடிநீர் மற்றும் நீர்வள மேலாண்மையில் மைசூர் பகுதியின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக அமைந்தது. புனே அருகிலுள்ள கடக்வாஸ்லா நீர்த்தேக்கத்தில் நீர்மட்டத்தை கட்டுப்படுத்தும் தானியங்கி நீர்வெள்ளக் கதவு முறையையும் அவர் உருவாக்கினார். பின்னர் இந்தத் தொழில்நுட்பம் மற்ற அணைகளிலும் பயன்படுத்தப்பட்டது.

இதன் மூலம் ஒரு முக்கியமான உண்மை வெளிப்படுகிறது: ஒரு பொறியாளரின் பணி ஒரு கட்டிடத்தை அல்லது ஓர் அணையை உருவாக்குவதோடு முடிவதில்லை; அந்தப் பணியின் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே அதன் உண்மையான வெற்றி.

வெள்ளத்திலிருந்து நகரங்களைப் பாதுகாத்த பொறியாளர் விஸ்வேஸ்வரய்யாவின் திறமை அணை மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. ஹைதராபாத் நகரத்தை வெள்ளப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான திட்டங்களை உருவாக்குவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். விசாகப்பட்டினம் துறைமுகத்தை கடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான தொழில்நுட்பத் தீர்வுகளையும் வழங்கினார். பீகாரில் கங்கை நதியின் மீது அமைக்கப்பட்ட மொகாமா பாலம் தொடர்பான பணிகளிலும் தனது பொறியியல் அறிவை வழங்கினார். திருப்பதி – திருமலை மலைச்சாலை அமைப்புத் திட்டத்திலும் அவரது தொழில்நுட்பப் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இதனால், அவர் ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டுமே பணியாற்றிய பொறியாளர் அல்ல; மக்களின் வாழ்க்கையில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தீர்வுகளை உருவாக்கிய பல்துறை சிந்தனையாளர் என்பதை அறிய முடிகிறது.

**பொறியாளராக மட்டுமல்ல நிர்வாகியாகவும்**

1909 ஆம் ஆண்டு மைசூர் அரசின் தலைமைப் பொறியாளராக நியமிக்கப்பட்ட விஸ்வேஸ்வரய்யா, பின்னர் 1912 முதல் 1919 வரை மைசூர் அரசின் திவானாகப் பணியாற்றினார். அவரது நிர்வாகக் காலத்தில் கல்வி, தொழில், வர்த்தகம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகிய துறைகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மைசூர் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை, மைசூர் சோப்பு தொழிற்சாலை, கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட பல முயற்சிகளுக்கு அவரது பங்களிப்பு இருந்தது. அதனால் தான் அவர் "நவீன மைசூரின் தந்தை" என்று போற்றப்படுகிறார்.

அவரது சிறப்பான பொதுச் சேவையைப் பாராட்டி 1915 ஆம் ஆண்டு அவருக்கு ‘‘சர்’’ பட்டம் வழங்கப்பட்டது. மேலும், இந்தியாவின் உயரிய விருதான பாரத் ரத்னா 1955 ஆம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது.

**கல்வி வளர்ச்சிக்கும் முக்கியத்துவம்**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தொழில்நுட்பம் மட்டுமே போதாது; அதை உருவாக்கும் திறமையான மனித வளமும் அவசியம் என்பதை விஸ்வேஸ்வரய்யா நன்கு உணர்ந்திருந்தார். அதனால் கல்வி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அவர் முக்கியத்துவம் அளித்தார். அவரது பெயரில் இன்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் முக்கியமான கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

அவற்றில் சில:

* விஸ்வேஸ்வரய்யா தேசிய தொழில்நுட்ப நிறுவனம் – நாக்பூர்
* விஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் – பெலகாவி
* சர் எம். விஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்ப நிறுவனம் – பெங்களூரு
* பல்கலைக்கழக விஸ்வேஸ்வரய்யா பொறியியல் கல்லூரி – பெங்களூரு

இவை அனைத்தும் அவரது பொறியியல் மற்றும் கல்விச் சேவைகளின் நினைவுச் சின்னங்களாகத் திகழ்கின்றன.

**பொறியாளர்கள் – நாட்டின் வளர்ச்சியின் முதுகெலும்பு**

விஸ்வேஸ்வரய்யாவின் காலத்தில் அணைகள், பாலங்கள், நீர்ப்பாசனம் மற்றும் தொழில்துறை வளர்ச்சி முக்கியமான சவால்களாக இருந்தன. இன்று சவால்கள் இன்னும் பல மடங்கு அதிகரித்துள்ளன. மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிகரிப்பது, நகர்ப்புற வளர்ச்சிக்கு ஏற்ப உள்கட்டமைப்பை உருவாக்குவது, குடிநீர் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாப்பது, சுற்றுச்சூழலைக் காப்பது, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவது என ஒவ்வொரு துறையிலும் பொறியாளர்களின் பங்கு அதிகரித்து வருகிறது. குறிப்பாக மின்சாரப் பொறியாளர்கள், ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படையான பணியை மேற்கொள்கின்றனர். மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தைப் பாதுகாப்பாகவும் தடையின்றியும் மக்களின் வீடுகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு கொண்டு சேர்ப்பது மிகப்பெரிய பொறுப்பு.

ஒரு சில நிமிடங்கள் மின்சாரம் தடைப்பட்டால்கூட அதன் தாக்கத்தை பொதுமக்கள் உணர்கிறார்கள். ஆனால் அந்த மின்சாரம் தடையின்றி கிடைப்பதற்காக 24 மணி நேரமும், வெயில்ரூ-மழை பாராமல், பல்வேறு சூழ்நிலைகளில் பணியாற்றும் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் உழைப்பு பெரும்பாலும் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. அதுவே பொறியியல் பணியின் தனிச்சிறப்பு.

**உலக பொறியாளர் தினம்**

உலக அளவில் மார்ச் 4 ஆம் தேதி உலக பொறியாளர் தினம் கொண்டாடப்படுகிறது. நிலையான வளர்ச்சி, புதுமையான தொழில்நுட்பம், ஆற்றல், நீர்வளம் மற்றும் நிலையான உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் பொறியாளர்களின் பங்களிப்பை முன்னிறுத்துவதே இந்த நாளின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

இன்றைய உலகம் எதிர்கொள்ளும் காலநிலை மாற்றம், எரிசக்தி தேவை, நீர் பற்றாக்குறை, நகர்ப்புற வளர்ச்சி போன்ற சவால்களுக்கு நிலையான தீர்வுகளை உருவாக்குவதில் பொறியாளர்களின் பங்கு மிக முக்கியமானது.

**இளம் பொறியாளர்களுக்கு ஒரு செய்தி**

விஸ்வேஸ்வரய்யாவின் வாழ்க்கை இன்றைய இளம் பொறியாளர்களுக்கு ஒரு மிகப்பெரிய முன்னுதாரணம். பட்டம் பெற்றவுடன் பொறியியல் முடிந்துவிடுவதில்லை; உண்மையான பொறியியல் பயணம் அதன்பிறகுதான் தொடங்குகிறது. புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்வது, பிரச்சினைகளை வித்தியாசமான கோணத்தில் அணுகுவது, சமூகத்தின் தேவைகளைப் புரிந்துகொள்வது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மற்றும் தங்களது அறிவை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துவது – இவையே ஒரு சிறந்த பொறியாளரின் அடையாளங்கள். இன்றைய இளம் பொறியாளர்கள் ‘‘நான் என்ன வேலை செய்கிறேன்?’’ என்பதோடு நின்றுவிடாமல், ‘‘என்னுடைய அறிவால் சமூகத்திற்கு என்ன பயன் கிடைக்கிறது?’’ என்ற கேள்வியையும் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**விஸ்வேஸ்வரய்யா அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற மிகப்பெரிய செய்தி இதுதான்:**

‘‘அறிவு தனக்காக மட்டும் அல்ல; அது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.’’ அந்த எண்ணத்துடன் பணியாற்றும் ஒவ்வொரு பொறியாளருக்கும், **இனிய பொறியாளர் தின நல்வாழ்த்துகள் !**

**அமர்நாத் சுப்பிரமணி**
மின் அலை ஆசிரியர் குழு உறுப்பினர்

## நீட் தேர்வில் அசத்தும் அரசு பள்ளி மாணவர்கள்

திருச்சி: திருச்சியை அடுத்த துவாக்குடி அரசு மாதிரிப் பள்ளியில் படித்து நீட் தேர்வு எழுதிய 74 மாணவர்களில் 32 பேருக்கு, முதல் முயற்சியிலேயே அரசு மருத்துவ கல்லூரிகளில் எம்பிபிஎஸ் படிப்பில் சேர வாய்ப்பு கிடைத்துள்ளது.

துவாக்குடியில் உள்ள அரசு மாதிரிப் பள்ளியில் அறிவியல், கணிதம் பாடப்பிரிவில் 2025–26 கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களில் 74 பேருக்கு பாடத்திட்டத்துடன் நீட் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

இந்நிலையில் நீட் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தர வரிசை பட்டியலில் இப்பள்ளி மாணவர் எஸ்.மாதவ்(564 மதிப்பெண்கள்) உட்பட 4 மாணவர்களுக்கு அகில இந்திய ஒதுக்கீட்டில் மருத்துவக் கல்வி பயிலும் வாய்ப்பும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டின் கீழ் 28 பேருக்கு தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பும் உருவாகி உள்ளது.

இதில், பட்டியலின மாணவர் பிரிவில் சஞ்சய் தரன் மாநிலத்தில் 2–ம் இடம், பழங்குடியினர் பிரிவில் மாணவி தீபிகா 3–ம் இடம், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் பிரிவில் வனிஷா 5–ம் இடம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் ஜனுஜா 7–ம் இடம், பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் கே.கோபிகிருஷ்ணன் 15–ம் இடம் என 5 பேர் மாநில அளவில் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

நிகழாண்டில் இப்பள்ளியில் பயின்ற 32 பேர் முதல் முயற்சியிலேயே எம்பிபிஎஸ் படிப்பில் சேரும் வாய்ப்பை பெற உள்ளனர். இது தவிர, அரசு பல் மருத்துவக் கல்லூரிகளில் பிடிஎஸ் படிப்பிலும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்பிபிஎஸ், பிடிஎஸ் சீட் கிடைக்க வாய்ப்புள்ளது.

இதுகுறித்து கல்வியாளர்கள் இந்து தமிழ் நாளிதழிடம் கூறியதாவது: துவாக்குடி அரசு மாதிரிப் பள்ளியில் பயின்று நீட் தேர்வெழுதிய 74 மாணவர்களில் 32 பேர் முதல் முயற்சியிலேயே நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று எம்பிபிஎஸ் படிப்பில் சேர உள்ளனர்.

பொதுவாக போட்டித் தேர்வு பயிற்சி மையங்களின் வெற்றி சதவீதம் சராசரியாக 10 முதல் 15 சதவீதம்தான் இருக்கும். ஆனால், துவாக்குடி அரசு பயிற்சி மையத்தின் வெற்றி கிட்டத்தட்ட 50 சதவீதமாக இருப்பது மிகப்பெரும் சாதனை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## உடன்குடி அனல் மின் நிலைய இரண்டாவது அலகில் டிசம்பர் மாதம் சோதனை ஓட்டம்

உடன்குடி அனல் மின் நிலைய இரண்டாவது ஆலையில் டிசம்பர் மாதம் சோதனை ஓட்டம் நடைபெற இருப்பதாக மின்சார வாரிய உயர் அதிகாரிகள் கூறினர்.

உடன்குடி அனல் மின் நிலையம் தமிழ்நாடு மின்சார உற்பத்தி கழகம் சார்பில் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூபாய் 13,077 கோடி செலவில் தலா 660 மெகாவாட் மின் உற்பத்தி திறனுடன் இரண்டு அலகுகளை கொண்ட மிக உயர் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமான பணிகள் அனைத்தும் முடிவடைந்ததைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் 13ஆம் தேதி, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்தவாறு அப்போதைய முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் உடன்குடி அனல் மின் நிலையத்தின் முதல் அலகை திறந்து வைத்து மின்சார உற்பத்திக்கான சோதனை ஓட்டத்தை தொடக்கி வைத்தார்.

பொதுவாக அனல் மின் நிலையம் தொடர்ந்து 72 மணி நேரம் முழு கொள்ளளவுடன் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டால் உடனடியாக வணிக உற்பத்திக்கு மாற்றப்படுவது வழக்கம் அந்த வகையில் தற்போது உடன்குடியில் உள்ள முதல் அலகு 22 மணி நேரமும் முழு கொள்ளளவுடன் இயங்கி மின்சார உற்பத்தியை எட்ட இருக்கிறது இதனால் இம்மாத இறுதியில் முதல் அலகு வணிக ரீதியிலான உற்பத்தியை தொடங்க இருக்கிறது இதற்கான முறையான அறிவிப்பு மின்சாரத் துறையிலிருந்து விரைவில் வெளியாகும்.

அதேபோல் உடன்குடி அனல் மின் நிலையத்தில் முதல் அலகின் வணிக ரீதியிலான மின்சார உற்பத்தி தொடங்கப்பட இருப்பதை தொடர்ந்து, இரண்டாவது அலகில் பணிகள் நிறைவடைந்த நிலையில் சோதனை ஓட்டம் இந்த ஆண்டு இறுதியில் டிசம்பரில் தொடக்கப்பட உள்ளது அதற்கான பணிகளும் தீவிரமாக நடந்து வருகிறது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இரண்டு அலகுகளும் முழு திறனில் செயல்பட உள்ளது.

இந்த வளாகத்தில் மேலும் மூன்று அலகுகள் நிறுவிட விரிவாக்க பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது தற்போது உள்ள இரண்டு அலகுகளும் இனிவரும் மூன்று அலகுகளுக்கும் நிலக்கரி கொண்டுவர சிறப்பு கப்பல் தளமும் கூடிய கண்டெய்னர் அமைப்பும் கட்டப்பட்டுள்ளது. கூடுதல் நிலக்கரியை சேமிக்க 6.80 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட திறந்த மற்றும் மூடிய தளங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த மின்நிலையத்தின் தேவைகளுக்காக கடல் நீரிலிருந்து நன்னீர் உற்பத்தி செய்யும் எந்திரங்கள் உள்ளன என்றும் அதிகாரிகள் கூறினர்.

## மின்சாரத் துறையில் இணை மின்விநியோக உரிமம்

முன்மொழியப்பட்ட இந்தக் கட்டமைப்பு, புதிய விநியோக உரிமதாரர்கள் ஏற்கனவே உள்ள வலையமைப்புகளை இரட்டிப்பின்றிப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம் மின்சார விநியோகத்தில் போட்டியை ஏற்படுத்த முயல்கிறது. மின்சார அமைச்சகத்தின் ஆலோசனைக் குழு, விநியோக வலையமைப்பை இரட்டிப்பாக்காமல் மின்சார விநியோகத்தில் போட்டியை அறிமுகப்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்ட இணை விநியோக உரிமக் கட்டமைப்பு குறித்து விவாதித்தது.

இந்த முன்மொழிவின் கீழ், தற்போதுள்ள விநியோக உரிமதாரர்கள் தங்கள் வலையமைப்புகளைத் தொடர்ந்து சொந்தமாக வைத்து, இயக்கி, பராமரிப்பார்கள். புதிய உரிமதாரர்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட மின்பாதை பயன்பாட்டிற்க்கான வீலிங் கட்டணங்களைச் செலுத்தி தற்போதுள்ள வலையமைப்பைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் (SERC) அனுமதிக்கப்படும் இடங்களில் தங்கள் சொந்த வலையமைப்புகளை அமைக்கும் விருப்பத்தையும் அவர்கள் தக்க வைத்துக் கொள்வார்கள் என்று அமைச்சகம் கூறியது.

2003 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்டம் ஒரே பகுதியில் பல விநியோக உரிமதாரர்களை அனுமதித்தாலும், ஒவ்வொருவரும் தங்களின் சொந்த விநியோக வலையமைப்பை நிறுவ வேண்டும் என்று அது கோருகிறது. இது மின்கம்பங்கள், மின் இணைப்புகள் மற்றும் துணை மின் நிலையங்கள் இரட்டிப்பாக வழிவகுக்கிறது, மூலதனச் செலவினங்களை அதிகரிக்கிறது, புதிய முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்கிறது மற்றும் வளங்களைத் திறனற்ற முறையில் பயன்படுத்த வழிவகுக்கிறது.

குழுவில் உரையாற்றிய மத்திய மின்சாரத்துறை அமைச்சர் மனோகர் லால், மின்சாரச் சட்டம் மின் உற்பத்தி, மின் கடத்தல் மற்றும் வர்த்தகத்தில் போட்டியை அறிமுகப்படுத்தியதாகவும், ஆனால் விநியோகம் மட்டுமே போட்டி குறைவாக உள்ள ஒரே முக்கியப் பிரிவாக உள்ளது என்றும் கூறினார். மின்சார விநியோக வலையமைப்பிற்கு பாகுபாடற்ற அணுகலை உறுதி செய்வதற்காக, விரிவான செயலாக்கக் கட்டமைப்பு SERC–களால் உருவாக்கப்படும் என்று அவர் கூறினார்.

அனைத்து விநியோக உரிமதாரர்களும் மின்சாரச் சட்டத்தின் கீழ் உள்ள அனைவருக்கும் சேவை வழங்கும் கடமைக்குத் தொடர்ந்து கட்டுப்பட்டிருப்பார்கள், அதே நேரத்தில், இலாபம் ஈட்டும் நுகர்வோருக்கு மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் விநியோகம் செய்வதை இந்தக் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு தடுக்கும் என்று அமைச்சகம் தெரிவித்தது.

தொலைத்தொடர்பு மற்றும் விமானப் போக்குவரத்து போன்ற துறைகளில் உள்ள தேர்வுகளைப் போலவே, நுகர்வோரும் தங்கள் மின்சார வழங்குநரைத் தேர்வு செய்ய சுதந்திரம் பெறுவார்கள் என்று அமைச்சர் கூறினார்.பல ஆண்டுகளாக நுகர்வோர் தங்கள் வழங்குநரைத் தேர்வு செய்து வரும் மும்பையை அவர் ஒரு உதாரணமாகக் குறிப்பிட்டார், அங்கு SERC–யின் மேற்பார்வையின் கீழ் விநியோக வலையமைப்பு ஒருங்கிணைந்த முறையில் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருகிறது.

நன்றி – பிசினஸ் ஸ்டாண்டர்ட் இணைய இதழ் 24.07.2026

## அணுசக்தி துறையில் வரையறுக்கப்பட்ட அளவில் தனியார் மற்றும் வெளிநாட்டு பங்கேற்பு.

இந்தியாவின் SHANTI சட்டம் 2025–ன் கீழ் முதல் வரைவு விதிகள் தயாராகிவிட்டன. முக்கிய அமைச்சகங்கள், துறைகள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்களுடன் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2025–ல் நிறைவேற்றப்பட்ட SHANTI (Sustainable Harnessing and Advancement of Nuclear Energy for Transforming India) சட்டம், Atomic Energy Act 1962 மற்றும் Civil Liability for Nuclear Damage Act 2010ஆகியவற்றை ரத்து செய்து, அணுசக்தி துறையை வரையறுக்கப்பட்ட அளவில் தனியார் மற்றும் வெளிநாட்டு பங்கேற்புக்குத் திறந்துள்ளது.

இந்த சட்டம் இந்தியாவின் தற்போதைய அணுசக்தி திறனை 8.78 GW–லிருந்து 2047-க்குள் 100 GW ஆக உயர்த்தும் இலக்கை ஆதரிக்கிறது. வரைவு விதிகள் உரிமம், பாதுகாப்பு, கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு உள்ளிட்ட 26 துறைகளை உள்ளடக்கியவை. பெரிய ஆலைகளுக்கு இயக்குநரின் பொறுப்பு ₹3,000 கோடி வரை வரம்பிடப்பட்டுள்ளது.

முதன்முறையாக இந்திய தனியார் நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் (joint ventures) அணு மின் நிலையங்களை கட்டமைத்து, சொந்தமாக்கி, இயக்கி, முடக்கலாம். இது முன்பு அரசு நிறுவனங்களுக்கு (NPCIL போன்றவை) மட்டுமே இருந்த ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டுவருகிறது.மேலும் தற்போதைய 8.78 GW–லிருந்து 2047–க்குள் 100 GW அணுசக்தி திறனை அடைய உதவும் என எதிர்பார்க்கபடுகிறது. இதில் அரசு நிறுவனங்கள் 54 GW சேர்க்க திட்டமிட்டுள்ளன; மீதமுள்ளவை தனியார் மூலம் வரலாம்.

இது சுத்தமான ஆற்றல், நிலையான மின்சாரம் மற்றும் 2070 நெட்–ஜீரோ இலக்கிற்கு ஆதரவாகும். சப்ளையர் (உபகரண வழங்குநர்கள்) மீதான சட்டப்பூர்வ பொறுப்பை நீக்கி, இயக்குநரின்

பொறுப்பை தரப்படுத்தி (பெரிய ஆலைகளுக்கு ₹3,000 கோடி வரை) வெளிநாட்டு மற்றும் தனியார் முதலீட்டை ஈர்க்க உதவுகிறது. AERB–க்கு சட்டப்பூர்வ அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அணு ஆலைகளின் பொறுப்பு வரம்புகளை பொறுத்தமட்டில் இயக்குநரின் பொறுப்பு ₹100 கோடி (சிறிய ஆலை) முதல் ₹3,000 கோடி (பெரிய ஆலை) வரை மட்டுமே. மொத்த வரம்பு ₹3,900 கோடி மட்டுமே. இது ஃபுகுஷிமா அல்லது செர்னோபில் போன்ற பேரழிவுகளின் உண்மையான செலவுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவு. அதிகப்படியான சேதத்தை அரசு (வரி செலுத்துவோர்) ஏற்க வேண்டும். மேலும் சப்ளையர்களுக்கு எதிரான "right of recourse" நீக்கப்பட்டதால், பாதுகாப்பு தரங்களை குறைக்கும் "moral hazard" ஏற்படலாம் என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இயற்கை பேரிடர்களுக்கான விலக்குகளும் உள்ளன. இருப்பினும் யுரேனியம் / தோரியம் சுரங்கம், எரிபொருள் செறிவூட்டல், செலவழிக்கப்பட்ட எரிபொருள் மேலாண்மை போன்றவை அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். வெளிநாட்டு நிறுவனங்கள் நேரடியாக இயக்க முடியாது; இந்திய நிறுவனங்கள் வழியாக மட்டுமே நிர்வகிக்க இயலும். இச்சட்டம் அணுசக்தி துறையை வணிகரீதியாக அணுகக்கூடியதாக மாற்றி, முதலீட்டையும் வேகத்தையும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

ஆனால் பாதுகாப்பு, பொறுப்பு மற்றும் கணக்காய்வு ஆகியவற்றில் சமநிலை தேவை. விதிகள் இறுதி செய்யப்பட்ட பிறகுதான் முழு தாக்கம் தெரியும். தனியார் பங்கேற்பு அதிகரித்தால், 2047 இலக்கு நெருங்கும் வாய்ப்புள்ளது; ஆனால் பாதுகாப்பு தரங்களை கடுமையாக பராமரிப்பது முக்கியம்.

நன்றி : இணைய வலைதளம்

**விவசாய ஃபீடர்களை சூரிய மின்மயமாக்கல்**

தெலுங்கானாவில் உள்ள சுமார் 28 லட்சம் விவசாய கிணறுகள் அதிகாலை நேரத்தில் 3,000 மெகாவாட் மின்சார பற்றாக்குறையை உருவாக்குவதாகவும் சூரியன் உதிக்கும் முன் சூரிய மின்சாரம் கிடைக்காததால், அனல் மின் நிலையங்கள் அல்லது வெளியில் இருந்து வாங்கும் விலையுயர்ந்த மின்சாரம் (ஒரு யூனிட்டுக்கு சுமார் ₹10) தேவைப்படுகிறது. பகலில் சூரிய மின்சாரம் உபரியாக இருந்தாலும் இந்த நிலை ஏற்படுகிறது. எனவே நிபுணர் குழு, விவசாய மின்சார விநியோகத்தை பகல் நேரத்திற்கு மாற்றவும், PM-KUSUM திட்டத்தின் கீழ் விவசாய ஃபீடர்களை சூரிய மின்மயமாக்கலை விரைவுபடுத்தவும் பரிந்துரைத்துள்ளது. இது செலவைக் குறைத்து, மின்வலைய அழுத்தத்தைக் குறைத்து, நிலத்தடி நீர் மட்டம் குறைவதைச் சமாளிக்க உதவும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் தமிழகத்திலும் இலவச விவசாய இணைப்புகள்: சுமார் 23.56 லட்சம் முதல் 23.97 லட்சம்வரை உள்ளன. இவற்றின் இணைக்கப்பட்ட சுமை (Connected Load)TNERC மானிய ஆணை (FY 2025-26) ன் படி சாதாரண வகை (Normal): 1,55,14,875 HP ஆகவும் SFS ல் 30,07,838 HP என மொத்தம்:சுமார் 1.85 கோடி HP உள்ளன. (இது சுமார் 13,000–14,000 மெகாவாட் அளவுக்கு சமம் என மதிப்பிடப்படுகிறது. இவற்றின்ஆற்றல் நுகர்வு (Energy Consumption) 15,909 MU முதல் 17,541 MU வரை இருக்கும் என மதிப்பிடபட்டுள்ளது. இது மொத்த மின் நுகர்வில்சுமார் 17% முதல் 19.5% வரை ஆகும். எனவே தமிழக அரசும் PM-KUSUM திட்டத்தின் கீழ் விவசாய ஃபீடர்களை சூரிய மின்மயமாக்கல் திட்டத்தை விரைவுபடுத்த உள்ளது.

நன்றி : இணைய வலைதளம் மற்றும் ஜூலை 31, 2026 Deccan Chronicle கட்டுரை

# கண்ணீர் அஞ்சலி

**பொறியாளர்**

1. 22.08.2026 அன்று பொர்.பொ.பி.சிவராமன், AEE / TTPS , TTPS கிளை அவர்கள் 9865347042

பொறியாளரின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது

**பொறியாளர் குடும்பத்தினர்கள்**

1. 15.08.2026 அன்று பொர்.S.அருள்முருகன், AE / Protection / Gobi MRT, Gobi Branch அவர்களின் தந்தையார். 89701 41028.
2. 19.08.2026 அன்று பொர்.P.K.சரவணன், AE / Gurubarapalli, Branch Secretary / Krishnagiri Branch அவர்களின் தாயார். 94438 49303.

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## CERC சந்தை இணைப்பு விதிமுறைகளை உருவாக்கும் பணியைத் தொடர உச்ச நீதிமன்றம் அனுமதி

ஆகஸ்ட் 3, 2026 அன்று உச்ச நீதிமன்றம், இந்திய எரிசக்தி பரிவர்த்தனை (IEX) தாக்கல் செய்த மனுவை காலத்திற்கு முந்தையது என தள்ளுபடி செய்தது. நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா மற்றும் அலோக் ஆராதே அடங்கிய அமர்வு, சந்தை இணைப்பு தொடர்பான இறுதி விதிமுறைகள் இன்னும் அறிவிக்கப்படாததால் இந்த வழக்கு முன்கூட்டியே உள்ளது எனக் கூறியது.

மேலும் CERC சந்தை இணைப்பு விதிமுறைகளை உருவாக்கும் பணியைத் தொடர அனுமதி அளிக்கப்பட்டது. CERC நீதிமன்றத்திடம், விதிமுறைகள் 4 முதல் 6 வாரங்களில் அறிவிக்கப்படும் என தெரிவித்தது. சந்தை இணைப்பு (Market Coupling) என்றால் என்ன? என்பதை முதலில் அறிவோம். பல்வேறு மின்சார பரிவர்த்தனை மையங்களில் (IEX, PXIL, HPX போன்றவை) தனித்தனியாக விலை மதிப்பிடுவதிற்கு பதிலாக, ஒரே சீரான விலை மதிப்பிடும் முறையை உருவாக்குவதே இதன் நோக்கம்.

குறிப்பாக Day-Ahead Market (DAM)–ல் அனைத்து பரிவர்த்தனை மையங்களின் வாங்கும் மற்றும் விற்கும் ஆர்டர்களை ஒருங்கிணைத்து ஒரே சந்தை அனுமதி விலையை நிர்ணயிப்பது இதன் நோக்கம் ஆகும். ஜூலை 2025–ல் CERC தானாக முன்வந்து (suo-motu) ஆணை பிறப்பித்து, படிப்படியாக சந்தை இணைப்பை அமல்படுத்த உத்தரவிட்டது. IEX அதை APTEL–ல் சவால் செய்தது. பிப்ரவரி 2026–ல் APTEL அதை காலத்திற்கு முந்தையது என தள்ளுபடி செய்தது.

பின்னர் IEX உச்ச நீதிமன்றத்தை அணுகியது. IEX மின்சார பரிவர்த்தனை சந்தையில் ஆதிக்கம் செலுத்துவதால், இந்த நடவடிக்கை அதன் சந்தைப் பங்கை பாதிக்கும் என வாதிட்டது. இந்த உத்தரவுக்குப் பிறகு IEX பங்குகள் சிறிது வீழ்ச்சியடைந்தன. CERC விதிமுறைகளை இறுதி செய்த பிறகு, அமலாக்கம் தொடங்கும். அதன் பிறகு தேவைப்பட்டால் மீண்டும் சட்ட சவால்கள் எழலாம்.

## மருத்துவ துறையில் உலகமயமக்கல் – ஒரு சாமான்யனின் பார்வை

ஒரு விசித்திரமான விஷயத்தைக் கவனித்தீர்களா? நோய்வாய்ப்படுவது இனி செலவு மிக்கதாக இல்லை. அது ஒரு குற்றமாகிவிட்டது. குறிப்பாக நீங்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தால். மருத்துவர்களின் கட்டணம் அதிகமாகிறது. படுக்கைகளின் விலை அதைவிட அதிகம். மருந்துகள் ஆடம்பரப் பொருட்கள் போலத் தோன்றுகின்றன.

கோவிட்–க்குப் பிறகு இந்தப் போக்கு தீவிரமடைந்தது. எல்லோரும் குறை கூறுகிறார்கள். ஏன் என்று யாரும் கேட்பதில்லை. தரமான மருத்துவ சேவை நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து நழுவிச் செல்கிறது. இந்த மாதிரி மேற்கத்திய நாடுகளில் செம்மைப்படுத்தப்பட்டது. இப்போது அது இந்தியாவிற்கு வந்துவிட்டது. 2022 மற்றும் 2024–க்கு இடையில், சுமார் 4 பில்லியன் டாலர் முதலீடு இந்திய மருத்துவமனை சங்கிலிகளுக்குள் பாய்ந்தது. அமைதியாக, துல்லியமாக, முக்கிய பங்குகள் கையகப்படுத்தப்பட்டன. மேற்கத்திய நிறுவனங்கள் தீவிரமாகப் பங்குகளை வாங்குகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூர் மருத்துவமனைகளுக்குப் பதிலாக புதிய மருத்துவமனைகளைக் கட்டுகின்றன. கட்டண முறையைத் தரப்படுத்துகின்றன. அதிர்ச்சி சிகிச்சையை இயல்பாக்குகின்றன. மேலும், மருத்துவமனைகள் இந்தக் கொடிய முக்கோணத்தின் ஒரு பக்கம் மட்டுமே. இரண்டாவது புள்ளி. மருந்து நிறுவனங்கள். கூர்ந்து கவனியுங்கள். ஒவ்வொரு பெரிய இந்திய மருந்து நிறுவனமும், மேற்கத்திய முதலீட்டாளர்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் 20–35% வெளிநாட்டு உரிமையைக் கொண்டுள்ளன. மூன்றாவது புள்ளி. மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள். பெரும்பாலானவை கூட்டு முயற்சிகள். அல்லது வெளிநாட்டுக் கட்டுப்பாட்டில் உள்ளன.

இப்போது இந்த முக்கோணத்தை இணைத்துப் பாருங்கள். மருத்துவமனைகள் கட்டணங்களைப் பெருக்குகின்றன. மருந்து நிறுவனங்கள் உயர்தர மருந்துகளை வழங்குகின்றன. காப்பீட்டு நிறுவனங்கள் பிரீமியங்களை வசூலிக்கின்றன. பணியிடத்தில் காப்பீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சியில் காப்பீடு தீவிரமாக விற்கப்படுகிறது. அச்சமூட்டுவதே சந்தைப்படுத்தல் உத்தி.பிறகு நோய் தாக்குகிறது. 2010–ல் ஒரு பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு ₹2.5–3 லட்சம் செலவானது. 2025–ல், அதற்கு ₹6–10 லட்சம் செலவாகும். இது 150–200% அதிகரிப்பு. படுக்கைக் கட்டணங்கள் வேகமாக உயர்ந்தன. தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) கட்டணங்கள் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்தன. ஏறக்குறைய 60–70% காப்பீட்டுக் கோரிக்கைகள்,கழித்தல் அல்லது நிராகரிப்பை எதிர்கொள்கின்றன. மீதி? சேமிப்பால் செலுத்தப்படுகிறது. அல்லது கடன்களால். அனைத்து மருத்துவமனைகளிலும் ஒரே முதலீட்டாளர்களைக் காண்பீர்கள். மருந்துத் துறையிலும்.காப்பீட்டுத் துறையிலும். இது தற்செயலானது அல்ல.

இதுதான் இதன் வடிவமைப்பு.தனியார் மருத்துவமனைகள் லாபம் ஈட்டுகின்றன. மருந்து நிறுவனங்கள் லாபம் ஈட்டுகின்றன. காப்பீட்டு நிறுவனங்கள் லாபம் ஈட்டுகின்றன. பாரத், ஜன் அவுஷதி கேந்திரங்களை நடத்துகிறது. அதே மருந்துகள்.80–90% குறைந்த விலையில். மருந்துச் சீட்டை இன்னும் உன்னிப்பாகப் பாருங்கள். அதே உப்பு. அதே மூலக்கூறு. அதே வேதியியல். ஆனாலும், ஒரு ஸ்டிரிப்பின்

விலை ₹400. மற்றொன்று ₹40.ஆனால் மருத்துவர்கள் அவற்றை அரிதாகவே பரிந்துரைக்கிறார்கள். அவை வேலை செய்யாது என்பதற்காக அல்ல. ஆனால் அவை பணம் தராது என்பதற்காக. இந்தச் சூழல் அமைப்பு தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்கிறது. இது மேற்கத்தியர்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு மருத்துவப் பொருளாதாரம். இதே போன்ற ஒரு சூழல்தான் மிகப்பெரிய சந்தையாக உள்ள மின்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்த துடிக்கிறது.

## மாற்றம் ஒன்றே மாறாதது

கோடாக் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனங்களை நினைவிருக்கிறதா? 1997 ஆம் ஆண்டில், கோடாக்கில் சுமார் 1 லட்சம் பணியாளர்கள் இருந்தனர். உலகின் 85% புகைப்படம் எடுத்தல் கோடாக் கேமராக்கள் மூலம் செய்யப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக மொபைல் கேமராக்கள் அதிகரித்து வருவதால், கோடாக் கேமரா நிறுவனம் சந்தையை இழந்தது.

கோடாக் நிறுவனம் இழப்பை சந்தித்தது மற்றும் அதன் ஊழியர்கள் பலர் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.அதே நேரத்தில் மேலும் பல பிரபல நிறுவனங்கள் தங்களை நிலை நிறுத்திக்கொள்ள போராட வேண்டியதாயிற்று. எச்எம்டி (கடிகாரம்) பஜாஜ் (ஸ்கூட்டர்) டயனோரா (டிவி) மர்பி (ரேடியோ) நோக்கியா (மொபைல்) ராஜ்தூத் (பைக்) அம்பாசிடர் (கார்) என எந்த நிறுவனமும் மோசமான தரத்தைக் கொண்டிருக்க வில்லை.

இந்த நிறுவனங்கள் ஏன் தாக்குப் பிடிக்க முடியவில்லை? ஏனென்றால் காலப்போக்கில் அவர்களால் தங்களை எதிர் காலத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ள முடியவில்லை. தற்போதைய தருணத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் உலகம் எவ்வளவு மாறக்கூடும் என்று நீங்கள் கனவில்கூட நினைத்திருக்க மாட்டீர்கள்! இன்றைய 70%–90% வேலை வாய்ப்புகள் அடுத்த 10 ஆண்டுகளில் முழுமையாக போய் விடும். நாம் மெதுவாக "நான்காவது தொழில் புரட்சி" யுகத்தில் நுழைகிறோம். இன்றைய பிரபலமான நிறுவனங்களைப் பாருங்கள்–UBER என்பது ஒரு மென்பொருள் பெயர். அவர்களிடம் சொந்தமாக கார்கள் இல்லை.

இன்று உலகின் மிகப்பெரிய வாடகை டாக்ஸி நிறுவனம் UBER ஆகும். Airbnb இன்று உலகின் மிகப்பெரிய ஹோட்டல் நிறுவனமாகும். ஆனால் வேடிக்கை என்னவென்றால், அவர்களுக்கு உலகில் சொந்தமாக ஒரு ஹோட்டல் கூட இல்லை. இதேபோல், Paytm, Ola Cab, Oyo போன்ற எண்ணற்ற நிறுவனங்களின் உதாரணங்களைக் கொடுக்கலாம்.

இன்று அமெரிக்காவில் புதிய வழக்கறிஞர்களுக்கு வேலை இல்லை, ஏனென்றால் IBM Watson என்ற சட்ட மென்பொருள் மூலம் எந்தப் புதிய வழக்கறிஞரையும் விட மிகச் சிறப்பாக வாதிட முடியும். இதனால், கிட்டத்தட்ட 90% அமெரிக்க வழக்கறிஞர்களுக்கு அடுத்த 10 ஆண்டுகளில் எந்த வேலையும் இருக்காது. மீதமுள்ளது 10% நிபுணர்கள் மட்டுமே இருப்பார்கள். புதிய டாக்டர்களுக்கும் வேலை இல்லாமல் போகும். வாட்சன் மென்பொருள் மூலம் புற்று நோய் மற்றும் பிற நோய்களை மருத்துவர்களை விட 4 மடங்கு துல்லியமாக கண்டறிய முடியும். கணினி நுண்ணறிவு 2030 க்குள் மனித நுண்ணறிவை மிஞ்சும்.இன்றைய கார்களில் 90% அடுத்த 20 ஆண்டுகளில் சாலைகளில் காணாமல் போய் விடும். மீதமுள்ளவைகள் மின்சாரம் அல்லது ஹைபிரிட் கார்கள் மூலம் இயங்கும்.

சாலைகள் மெதுவாக காலியாகிவிடும். பெட்ரோல் நுகர்வு குறைந்து, எண்ணெய் உற்பத்தி செய்யும்நாடுகள் மெல்ல மெல்ல திவாலாகிவிடும்.கார் வேண்டும் என்றால் உபெர் போன்ற மென்பொருளிடம் தான் கேட்க வேண்டும். மேலும் நீங்கள் கார் கேட்டவுடனேயே முற்றிலும் டிரைவர் இல்லாத கார் வந்து உங்கள் வீட்டு வாசலில் நிற்கும். நீங்கள் ஒரே காரில் பலருடன் பயணம் செய்தால், ஒரு நபருக்கு ஒரு காரின் வாடகை பைக்கை விட குறைவாக இருக்கும். ஓட்டுநர் இல்லாமல் வாகனம் ஓட்டினால் விபத்துகளின் எண்ணிக்கை 99% குறையும். இதனால்தான் கார் இன்சூரன்ஸ் நிறுத்தப்படும் மற்றும் கார் இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்கு வேலை இல்லாமல் போகும். உலகில் கார் ஓட்டுனர்கள் இனி பிழைக்க வழி இருக்காது. 90% வாகனங்கள் சாலையில் காணாமல் போகும் போது, போக்குவரத்து போலீசார் மற்றும் பார்க்கிங் பணியாளர்கள் தேவைப்பட மாட்டார்கள்.

யோசித்துப் பாருங்கள், 10 ஆண்டுகளுக்கு முன்பு கூட தெருக்களில் STD பூத்கள் இருந்தன. நாட்டில் மொபைல் புரட்சி வந்த பிறகு இந்த STD பூத்கள் அனைத்தும் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டன. பிழைத்தவர்கள் மொபைல் ரீசார்ஜ் கடைகளுக்கு மாறிவிட்டனர். மொபைல் ரீசார்ஜில் மீண்டும் ஆன்லைன் புரட்சி. கொரோனாவிற்கு பிறகு மக்கள் வீட்டில் இருந்தபடியே தங்கள் மொபைலை ஆன்லைனில் ரீசார்ஜ் செய்யத் தொடங்கினர். இந்த ரீசார்ஜ் கடைகள் மீண்டும் வேறு வியாபாரத்துக்கு மாற வேண்டியிருந்தது. இப்போது இக்கடைகள் மொபைல் போன்கள் வாங்கவும் விற்கவும் பழுதுபார்க்கவும் மட்டுமே செய்கின்றன. ஆனால் இதுவும் மிக விரைவில் மாறும். அமேசான், பிளிப்கார்ட் போன்றவற்றிலிருந்து நேரடியாக மொபைல் போன் விற்பனை அதிகரித்து வருகிறது.

பணத்திற்கான அர்த்தம் மாறி வருகிறுகிறது. முன்பெல்லாம் ரொக்கம் கையில் இருந்தது, ஆனால் இன்றைய காலத்தில் அது "பிளாஸ்டிக் பணம்" ஆகிவிட்டது. கிரெடிட் கார்டுகள் மற்றும் டெபிட் கார்டுகள் புழக்கத்தில் சில நாட்களுக்கு முன்பு இருந்தன. இப்போது அதுவும் மாறி மொபைல் வாலட் காலம் வரப்போகிறது.

Paytm Gpayஇன் வளர்ந்து வரும் சந்தை, மொபைல் பணத்தின் காலமாக ஆகிவிட்டது. காலத்துக்கு ஏற்ப ஒத்துப்போக முடியாதவர்களை, காலம் இந்த உலகத்திலிருந்து நீக்குகிறது. எனவே காலத்திற்கு ஏற்ப மாறிக்கொண்டே இருங்கள். காலத்திற்கு ஏற்ப உங்களை தகவமைத்துக் கொள்ளுங்கள். காலத்திற்கு ஏற்ப தொடர்ந்து முன்னேறுங்கள்... வாழ்க வளர்க.

## செயற்கை சூரியன் திட்டம்...

சீனா தனது 'செயற்கை சூரியன்' (அணு இணைவு) திட்டத்திற்காக உலகின் மிகப்பெரிய &சக்திவாய்ந்த 582 மெட்ரிக் டன் எடையுள்ள சூப்பர் கண்டக்டர் மேக்னட்டை வெற்றிகரமாக இயக்கியுள்ளது.இந்த மேக்னட் 2030–க்குள் அணு இணைவு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சீனாவின் திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இது சுத்தமான எரிசக்தி தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் காட்டுகிறது.செயற்கை சூரியன் திட்டத்தின் புதிய மைல்கல்லாக, 5.82 லட்சம் கிலோ எடையுள்ள, உலகின் மிகப்பெரிய மின்காந்தத்தை உருவாக்கி, நம் அண்டை நாடான சீனா சாதனை படைத்துள்ளது.தற்போதைய காலகட்டத்தில் நிலக்கரி, பெட்ரோல் போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்படுவதால், காற்று மாசுபாடு ஏற்படுவதுடன், எதிர்காலத்தில் இந்த எரிபொருட்கள் தீர்ந்து விடும் அபாயமும் உள்ளது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் பெற்றாலும், அதிக அளவில் கிடைப்பதில்லை. இதற்கு மாற்றாக, சூரியனில் இயற்கையாக நடக்கும் அணுக்கரு இணைவு முறையை பூமியில் பின்பற்றி, தடையில்லாமல் துாய்மையான மின்சாரத்தைப் பெற சீன விஞ்ஞானிகள் முயற்சி மேற்கொண்டு உள்ளனர்.அதற்காக சீனாவில் உருவாக்கப்பட்டது தான் செயற்கை சூரியன் திட்டம்.

இந்த செயற்கை சூரியனை உருவாக்குவதற்கு மிகவும் சக்திவாய்ந்த மின்காந்தங்கள் தேவை.சூரியனுக்குள்ளே இருக்கும் கடுமையான வெப்பத்தையும், வாயுவையும் வழக்கத்தை விட மிகக் கடுமையான வெப்பத்திற்கு உட்படுத்தப்படும். அதில் இருந்து உருவாகும் மின்சக்தி எனப்படும் பிளாஸ்மாவையும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் பூட்டி வைக்க இந்த காந்தங்கள்தான் பயன்படுகின்றன.

இந்நிலையில், சீன அறிவியல் அகாடமியின் பிளாஸ்மா இயற்பியல் நிறுவனம், ஆங்கில எழுத்தான 'டி' வடிவத்தில், 69 அடி நீளமும், 40 அடி அகலமும் கொண்ட, 5.82 லட்சம் கிலோ எடை கொண்ட பிரமாண்டமான மின்காந்தத்தை தயாரித்துள்ளது.இந்த காந்தம், 10 கோடி டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையில் உருவாக்கப்படும் பிளாஸ்மாவை, சக்திவாய்ந்த தன் மின்காந்தப் புலத்தால் கட்டுப்படுத்தி குளிர்விக்கிறது.

இந்த புதிய மின்காந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை வெற்றி பெற்றது.இதன் வாயிலாக, 2027–ம் ஆண்டுக்குள் சிறிய அளவிலான சோதனை உலையை உருவாக்குவது, 2030ல் அணுக்கரு இணைவு மூலம் வணிக ரீதியாக மின்சாரம் உற்பத்தி செய்வது என்ற தன் லட்சிய திட்டத்தையும் சீனா எட்டுவது ஏறக்குறைய உறுதியாகியுள்ளது.இந்தத் தொழில்நுட்பம் வெற்றி பெற்றால், எதிர்காலத்தில் மின்சார தட்டுப்பாடும் இருக்காது, காற்று மாசுபாடும் ஏற்படாது என, ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

-நன்றி தினமலர் 29.07.26 இணைய கட்டுரை

## அகில இந்திய அளவில் தங்க பதக்கம் வென்ற தமிழ்நாடு மின்வாரிய அணிக்கு வாழ்த்துகள்

04.08.2026 முதல் 06.08.2026 வரை திருப்பதியில் நடைபெற்ற அகில இந்திய மின்சார வாரிய பணியளர்களுக்கான தடகளபோட்டிகள் நடைபெற்றது. இதில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை தமிழநாடு மின்சார வாரியம் வென்று சாதனை படைத்துள்ளது. மேலும் கேரம் பால் பேட்மிட்டன் போட்டிகளிலும் நமது மின்வாரிய அணி பங்கேற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

**வெற்றி பெற்ற அனைத்து மின்சார வாரிய உறவுகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.**

| Sl no | Event | Achievers | Position | Designation/EDC |
|---|---|---|---|---|
| 1 | 100m | M.Senthil Kumar | II | Gangman/ Coimbatore EDC |
| 2 | 200m | M.Senthil Kumar | II | Gangman/ Coimbatore EDC |
| 3 | 4x400 relay | M.Senthil Kumar | III | Gangman/ Coimbatore EDC |
| 4 | 400m | S.Sowtham | I | Jr.Asst ADM/NCTPS-II |
| 5 | 800m | S.Sowtham | II | Jr.Asst ADM/NCTPS-II |
| 6 | 4x400 relay | S.Sowtham | I | Jr.Asst ADM/NCTPS-II |
| 7 | 400m | P.Dineshkumar | II | Asst(ADM)/Salem EDC |
| 8 | 400 Hurdles | P.Dineshkumar | I | Asst(ADM)/Salem EDC |
| 9 | 4x100 relay | P.Dineshkumar | III | Asst(ADM)/Salem EDC |
| 10 | 4x400 relay | P.Dineshkumar | I | Asst(ADM)/Salem EDC |
| 11 | 1500m | R.Sundar | II | Gangman/Thiruvarur EDC |
| 12 | 1500m | P.Shoban | III | Gangman/Guindy EDC |
| 13 | 4x400 relay | P.Shoban | I | Gangman/Guindy EDC |
| 14 | 5000m | R.Alexandar | II | AE/Sholayar PH/Kadamparai |
| 15 | 10000m | R.Alexandar | III | AE/Sholayar PH/Kadamparai |
| 16 | 5000m | T. Vijayakanth | III | Gangman/ Coimbatore EDC |
| 17 | Long jump | PL.Balamurugan | I | JE II/Pudukottai EDC |
| 18 | High jump | PL.Balamurugan | II | JE II/Pudukottai EDC |
| 19 | Triple jump | PL.Balamurugan | III | JE II/Pudukottai EDC |
| 20 | High jump | P.Surender | III | Gangman/Tirupur EDC |
| 21 | 110m Hurdles | P.Surender | III | Gangman/Tirupur EDC |
| 22 | Disc throw | M.Mukesh | I | JE II/MTPS-II |
| 23 | Shotput | M.Mukesh | II | JE II/MTPS-II |
| 24 | Hamer throw | R.Alagushanmuga Pandiyan | I | Foreman/Madurai metro/west |
| 25 | Javelin throw | P.Thangadurai | I | CI/Pallavaram/Chennai south II |
| 26 | 110m Hurdles | B.Sivanesh | I | Assessor/Madurai metro west |
| 27 | 4x100 relay | S.Maheshwaran | III | Gangman/Sivaganga/Madurai EDC |
| 28 | 4x100 relay | K.Ramadhasan | III | Gangman /Kurichi/Trichy EDC |
| 29 | 4x400 relay | S.Balamurugan | I | Gangman/Coimbatore north EDC |

## In Ball Badminton also Our Team won Gold Medal in AIESCB TOURNAMENT at THIRUPATHI

| Sl no | Achievers | Designation/EDC |
|---|---|---|
| 1 | S.Ramesh | Asst. Adm. Officer, O/o. EE/O&M/Ambattur, SE/Chennai EDC/West. |
| 2 | P.Subash | Accounts Officer, O/o. SE/Dharmapuri EDC. |
| 3 | M.Palani Buddha | Section Officer, O/o. SB /Chennai. |
| 4 | Madan | Gangman, O/o. EE/O&M/Manaparai, Trichy EDC |
| 5 | R.Nalla thambi | DFC, O/o. SE/Nagapattinam EDC. |
| 6 | G.Anbu | AE, O/o. AE/Maintenance/230KV SS/Villupuram |
| 7 | N.Ramkumar | Asst Accts Officer, O/o. SE/CDC/Dindugal |
| 8 | P.Haristin Jebanasan | Gangman, O/o. AE /D/Papakudi Section, SE/Tirunalveli EDC. |
| 9 | R.Bharathi | Gangman, O/o. AE/O&M/J J Nagar South, SE/Chennai EDC/West. |
| 10 | M.Ravikumar | Gangman,O/o. AE/O&M/Perungulathur, SE / Tiruvanamalai EDC |
| 11 | A.Manigandan | AE/ O&M/ Paraniputhur/Porur Division/ SE- CEDC, South-I (Manager) |



**தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் 5வது மாநில பொதுக்குழுவில் கலந்து கொண்ட சங்க பொறுப்பாளர்கள் மற்றும் 2026 ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட TNEBRES பொறுப்பாளர்கள்**






**நாமக்கல் கிளையின் உறுப்பினர் மறைந்த பொர்.K.கோவிந்தசாமி / உ.செ.பொ /Shift /230 KV SS புதன் சந்தை அவர்களது காமதேனு நலநிதி பணப்பயன் ரூ.3,25,000/- கான காசோலை அவரது குடும்பத்தாரிடம் பொறியாளர் சங்கம் சார்பில் 04.08.2026 அன்று நாமக்கல் கிளை சங்க பொறுப்பாளர்கள் மற்றும் நாமக்கல் மண்டல செயலாளர் முன்னிலையில் காமதேனு நலநிதி பொருளாளர் அவர்களால் வழங்கப்பட்டது**



**கோபி கிளையின் உறுப்பினர் மறைந்த பொர்.G.தாரகேஷ்வரி / உ.செ.பொ/இயக்கம்/110 KV Grid SS பெரிய கொடிவேரி அவர்களது காமதேனு நலநிதி பணப்பயன் ரூ.3,00,000/-க்கான காசோலை அவரது குடும்பத்தாரிடம் பொறியாளர் சங்கம் சார்பில் 11.08.2026 அன்று கோபி கிளை சங்க பொறுப்பாளர்கள் மற்றும் ஈரோடு மண்டல செயலாளர் முன்னிலையில் காமதேனு நலநிதி பொருளாளர் அவர்களால் வழங்கப்பட்டது**



புதிய வாரியத் தலைவர் மதிப்பிற்குரிய V. அருண் ராய் I.A.S., அவர்களை 21.07.2026 அன்று சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



புதிய இணை மேலாண்மை இயக்குநர் / நிதி மதிப்பிற்குரிய I.S. மெர்சிரம்யா I.A.S., அவர்களை 14.07.2026 அன்று சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam